என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

FREE ISSUE

June 2013

லண்டன் தமிழர் தகவல்

London Tamil's Information

கலைஞர் 90 சுபவீ கவிதை

மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

லண்டனில் No1 நகை மாளிகை

Lakshmis Jewellers

தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்

லட்சுமி ஜுவலர்ஸ்

276 High Street North London E12 6SA UK

Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

எங்களுக்கு போட்டியும் கிளையும் இல்லை

Niru BRAND
Quality you can taste

FROZEN CURRIES

4 பேருக்கு போதுமான
- நண்டுக்கறி – £4.99
- விளைமீன் கறி – £3.49

Easy To Cook
Ready in 15 mins!
100 % NATURAL
NO PRESERVATIVES

Fantastic Taste..... TRY IT TODAY.

Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

தமிழர் தகவல்
Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்

திருவள்ளுவர் ஆண்டு 2044
நந்தன - **வைகாசி**
மலர் : 10
இதழ் : 121
ஜீன் - 2013

முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ்அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com

படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே

4000 பிரதிகள்

தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!

தமிழர் தகவல் அழைக்கிறது

தமிழர் தகவல் வாசக உறவுகளுக்கு

இனி வரும் இதழ்களில் சுவாரஸ்மான தகவல்கள் பல உள்ளடக்கிய புதிய பகுதிகள் இடம்பெற உள்ளன. வாசகர்களும் பங்கேற்றுச் சிறப்பிக்கலாம்.

வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!

இது நம்மவர் தயாரிப்பு

HOUSE OF HARLANS
TEA BLENDERS & PACKERS, ENGLAND

KINGS

LABEL TEA

KINGS TEA... FIT FOR A QUEEN

www.kingstea.co.uk

EURO TRAVEL & TOURS LTD

111-B Loampit Vale
Lewisham London SE13 7TG
Tel : 020 8465 9666 465 9491
Fax : 020 8465 9888

Tel : 020 8465 9666

தமிழில் தொடர்பு கொள்ள
தி. அருள்தாஸ்

Ilford பகுதியில் தமிழர் மளிகை கடை

SRI FOOD & WINE

396-400 Ilford Lane
Town Centre Ilford, IG1 2NB
Tel : 020 8553 7737



MITHUS Jewellers

322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792

DOSA LOUNGE

Croydon-ல் நம்மவர் தோசை கடை

We would like to thank our customers, friends and family for all their support over the past two years, helping us to make our new venture a success.

Paramanathan Family
Tel: 020 8684 6661 / Mob: 07956 206752

கண்ணீர் அஞ்சலி

17.10.1948 30.05.2013

இலங்கை, கொழும்பில் பிறந்து இளமைக்காலம் முழுவதையும் சொந்த ஊரான இளவாலையில் வாழ்ந்து, கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக, பெரிய பிரித்தானியாவில் வாழ்ந்த

வைத்திய கலாநிதி (திருமதி)

சகுந்தலாதேவி சற்குணசீலன்

அவர்கள் திடீர் சுகயீனத்தின் பின்பாகக் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.

அம்மையாரின் மறைவுக்கு தமிழர் தகவல் ஆழ்ந்த இரங்கலைப் பதிவு செய்து கொள்கிறது.

நாணயமான நாணய மாற்று நிறுவனம்

TRUST MONEY EXCHANGE

14 LOAMPIT HILL
LEWISHAM LONDON
LONDON SE13 7SW
United Kingdom

Tel : 0208 6946653
Mobile : 07800773330

செல்வராஜா கோல்ட் ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்

உங்கள் எண்ணம்போல் நகைகளையும் புடவைகளையும் தெரிவு செய்து கொள்ள

Selvaraja Gold House & Textiles

Exclusive Designer Jewellery, Sarees & all other Dresses

தங்கத்தின் விலை அதிகரித்து விட்டதா கவலை வேண்டாம். நகைகள் அனைத்தும் நம்ப முடியாத விலைக்கழிவில்

You are the best for you we are the best

162 B Mitcham Raod
London SW17 9NJ
Tel : 208 767 3795
Mobile : 078 25005269

அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம்

வழங்கும்

மாதம் இரண்டு திருக்குறள்

வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதுஒன்றும்
தீமை இலாத சொலல்

உண்மையென்று கூறப்படுவது
எது என்றால்,
மற்றவர்க்கு ஒரு சிறிதும்
தீமை தராத சொற்களைக்
கூறுதலேயாகும்

பொய்ம்மையும் வாய்மை இடத்த: புரைதீர்த்த
நன்மை பயக்கும் எனின்

பொய்மைச் சொற்களும்
குற்றமற்ற நன்மையைப்
பிறர்க்குத் தருமாயின்.
வாய்மைச் சொற்கள்
நல்வழி பெறும்

இந்தத் திருக்குறள் நூலை லண்டனில் பெற
தமிழர் தகவல் இதழைத் தொடர்புக்கொள்ளுங்கள்

விலை. 2 பவுண்ட் மட்டும்

கானக்குயில் 2013

20 ஆண்டுகளாக லண்டனில் தொடர்ந்து நடைபெறும் கலைநிகழ்ச்சி ஸ்ரீமதி யோகா தில்லைநாதனின் கானக்குயில் 2013. July 6 சனி மாலை 6 மணிக்கு Greenford Assembly Hall, Ruislip Road, Greenford இல் நடைபெற உள்ளது. Ayngaran International, Tharani Jewellery, Levenes Solution, Ratna & Co Solution, Air Lanka Ltd, London Baba, Veekay Autos, Vaishna Super Foods, Rathy Jewellers, Thinesh Jewellers, Southhall, South Harrow Abi Yarl Food ஆகியோர் ஆதரவில் நடைபெற உள்ள கானக்குயில் 2013 நிகழ்ச்சிக்கு இவ் ஆண்டுக்குரிய பால, இளைய, ஆண், பெண் கானக்குயில்களை உங்கள் வாக்குகளால் தெரிவு செய்ய July 6 சனி மாலை 5. 45க்கு Greenford நகர மண்டபம் வாருங்கள். சித்ராலயா இசைக் குழுவின் இனிய இசைக்கு 20 போட்டி பாடகர்களும், சிறப்புப் பாடல்களை கடந்த ஆண்டுகளின் கானக்குயில்களும் பாட உள்ளார்கள். நிகழ்ச்சிக்கு வருகை தந்து தமிழ்ப் பாடல்களை இனிமையாகப் பாடும் எமது இளைய தலைமுறையினரை ஊக்கப்படுத்துங்கள்.

டிக்கெட் £ 15, £ 10 (12 வயதிற்குட்பட்டோர்)

டிக்கட் : தாரணி ஜுவல்லரி (வெம்பிளி) ஸ்ரீமதி யோகா தில்லைநாதன்

0203 4898309 / 0790327708

Vinishas

Sri Lankan & South Indian Restaurant

Open 7 Days a week

11 am - 11 pm

இலங்கை, தென் இந்திய உணவகம்

2 Loampit Hill

Lewisham SE13 7SW

Tel : 0208 691 7944 / 7488

www.vinishas.co.uk

Free Home Delivery

(Minimum order 15.00 within 3 mile radius Between 5pm - 10.30pm

20% Discount on Take Away

Free Bottle of Wine on orders over £ 35

தயாராகிறது !

எழுத்தாளர் விபரத் திரட்டு 2013

ஈழத்து எழுத்தாளர்களின் விபரங்கள் அடங்கிய நூல் தயாராகிறது.

எழுத்தாளர்கள் தங்களின் பெயர், புனைப்பெயர், பிறந்த இடம், பிறந்த திகதி, கல்வித் தைகைம, தொழில், பரிசுகள் / விருதுகள், ஆர்வம், படைப்புக்கள் வெளி வந்த ஊடகங்கள், நூல்கள், இறுவெட்டுக்கள், முகவரி மின்னஞ்சல் போன்ற (விபரங்களை (புகைப்படத்துடன்) தந்து நூல் சிறப்புற உதவுங்கள்.

தொடர்புகளுக்கு:

R.MAHENDRAN,
34,REDRIFFE ROAD,
PLAISTOW,
LONDON. E13 0JX. UK
mullaiamuthan@gmail.com

கலைஞர் 90

நூற்றுக் கணக்கான படங்களால்
உன் உருவத்தைப் படம் பிடிக்கலாம்
உன் வாழ்வை எப்படி?

ஆயிரக் கணக்கான வரிகளால்
உன் வரலாற்றை எழுதலாம்
உன் புகழை எப்படி?

இலட்சக் கணக்கான வாக்குகளால்
உன் தேர்தலை மதிப்பிடலாம்
உன் வெற்றியை எப்படி?

கோடிக் கணக்கான உடன்பிறப்புகள்
ஒரு தலைவரை உருவாக்கலாம்
ஒரு கலைஞரை எப்படி?

சுப.வீரபாண்டியன்

கலைஞரைத் தமிழர் தகவல் வாழ்த்துகிறது

தமிழர் தகவல் வாசக நெஞ்சங்களுக்கு

தமிழர் தகவல் வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்.

இந்தப் பக்கத்தை நான் மிகுந்த மனவேதனையுடன்தான் எழுதுகிறேன். இனமானத்திற்காகத் தன்மானத்தை விட்டுக்கொடுப்பதில் தவறில்லை என்ற அடிப்படையில்தான், இதழின் வளர்ச்சிக்காக உங்களிடம் நிதி உதவி கேட்டு வேண்டுகோள் வைத்தேன். அதற்குத் துளியளவும் பலனில்லை.

லண்டனில் வெளிவந்து கொண்டிருந்த பல தமிழ் இதழ்கள் இடையிலே நின்று போயின. ஆனால் நம்முடைய தமிழர் தகவல்தான் பத்தாண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டு இருக்கிறது என்பது நீங்கள் அறியாத செய்தியில்லை. சொந்த மண்ணில் இருந்து ஒரு பத்திரிகை தொடங்கி நடத்துவதே, மிகக் கடினமான செயல் என்னும் நிலையில், புலம்பெயர்ந்த நாட்டில், நம்முடைய மொழியையும், இனத்தையும் முன்னிறுத்தி, அவற்றின் வளர்ச்சிக்காக ஒரு பத்திரிகை நடத்துவது எத்தனைக் கடினமானது என்பதை யாரும் உணரவில்லை என்பதையே உங்களின் அலட்சியம் காட்டுகிறது.

உலகளவில் தமிழினத்தின் மொழி, கலாச்சாரம், இன உணர்வு இவற்றைக் காப்பாற்றி வருபவர்கள், புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள்தான் என்ற பெருமை நமக்கு இருக்கிறது. அந்தப் பெருமைக்குரிய தகுதியை நாம் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறோமோ என்றே எனக்குத் தோன்றுகிறது.

நம்முடைய பிள்ளைகள் தமிழ் தெரியாதவர்களாக வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டின் பெருமை, கலாச்சாரம் அறியாதவர்களாக உருவாகிக் கொண்டு வருகிறார்கள். இது எம்மைப் போன்றவர்களுக்கு மிகுந்த மன வருத்தத்தையும், அச்சத்தையும் தருவதாக உள்ளது. காரணம் ஒரு இனத்தின் அழிவு தொடங்குவது இங்கேதான் என்பதை உலக வரலாறுகள் பதிவு செய்திருக்கின்றன.

விலைமதிப்பில்லாத உயிர்களை இழந்த நாம், அதைவிட மேலான உணர்வுகளையும் இழந்து விடக்கூடாது. நம்முடைய போராட்டங்களை, நாம் பட்ட அவமானங்களை, சந்தித்த புறக்கணிப்புகளை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி விடாமல் வரலாற்றையும், மொழியையும் சொல்லிச் சொல்லி வந்ததால்தான், இன்று யூதர்களுக்கு ஒரு நாடு சாத்தியமாயிற்று.

அப்படிப்பட்ட சிறப்பான பணியைத்தான் தமிழர் தகவல் செய்துவருகிறது. அகவை முதிர்ந்த நிலையிலும், விடாப்பிடியாக இதழை நான் நடத்திக் கொண்டிருப்பதற்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்?

கோயில்களுக்கு, சுற்றுலாவிற்கு, விருந்திற்கு, இன்னும் பல ஆடம்பர காரியங்களுக்குக் கணக்குப் பார்க்காமல் செலவிடுகிறீர்கள். வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழவேண்டும்தான். அதை நான் மறுக்கவில்லை. அதேநேரத்தில், நம்மைத் தக்கவைத்துக் கொள்வதற்கான, நம் இருத்தலை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான செயல்களுக்கும் கொஞ்சம் செலவிடலாமே என்பதுதான் என்னுடைய ஆதங்கம்.

சொந்த அடையாளத்தைத் தொலைத்தவர்கள் காலத்திற்கும் அகதிகள்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். பிள்ளைகளுக்கு நாம் யார் என்பதைச் சொல்லும் விதமாகவே தமிழர் தகவல் செய்திகளைத் தாங்கி வந்துகொண்டிருக்கிறது. இனியாவது சிந்தியுங்கள். செயல்படுத்துங்கள்.

நன்றி

டி.எம்.சௌந்தரராஜன்

பற்றி சுவையான குறிப்புகள்

டி.எம்.எஸ்.... தமிழ் மக்களைத் தனது காந்தர்வக் குரலால் கட்டிப்போட்ட எழிலிசை வேந்தன்: தமிழ் மொழியை அதற்கே உரிய அழகோடு தெள்ளத் தெளிவாக உச்சரித்துப் பாடிய பாட்டுத் தலைவன்!

• டி.எம்.எஸ். என்பதில் உள்ள `எஸ்' என்றால், சௌந்தரராஜன்: `எம்' என்பது அவரின் தந்தை மீனாட்சி அய்யங்கார்: `டி' என்பது அவரின் குடும்பப் பெயர் `தொகுளுவா', கர்ப்பம் தரித்திருக்கும் பெண்களுக்குச் சத்து மாவு தயாரித்துத் தருவதில் பிரபலமான குடும்பம் அவருடையது!

• டி.எம்.எஸ் ஸீக்கு டி.எம்.எஸ்ஸே சொல்லும் வேறு சில விளக்கங்கள் சுவையானவை. தியாகராஜ பாகவதர் (டி), மதுரை சோமு (எம்), கே.பி.சுந்தராம்பாள் (எஸ்) ஆகிய மூவரையும் தன் மானசீக குருமார்களாக வைத்திருப்பதையே இது குறிக்கிறது என்பார். தவிர, தியாகையர் (டி), முத்துசாமி தீட்சிதர் (எம்), சியாமா சாஸ்திரிகள் (எஸ்) ஆகிய இசை மும்மூர்த்திகளின் அனுக்கிரகமும் தனக்குக் கிடைத்துள்ளதையே இது குறிப்பிடுகிறது என்று மகிழ்வார்!

• மதுரை வரதராஜப் பெருமாள் கோயிலில் பூசாரியாகப் பணியாற்றியவர் டி.எம்.எஸ்ஸின் தந்தை மீனாட்சி அய்யங்கார்.

• டி.எம்.எஸ்ஸின் முதல் பாடல் `ராதே என்னை விட்டு ஓடாதேடி' ஒலிப்பதிவான இடம் கோவை சென்ட்ரல் ஸ்டுடியோ. 60 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு தொலைக்காட்சித் தொடருக்காக, மீண்டும் அங்கே போய், இடிபாடாகக்கிடந்த அதே பழைய ஒலிப்பதிவு அறையில் நின்று மீண்டும் அதே பாடலைப் பாடி மகிழ்ந்திருக்கிறார்!

• மதுரை, வரதராஜப் பெருமாள் கோயில் வளாகத்திலேயே ஓர் ஓரமாக பெஞ்சுகள் போட்டு, இந்தி வகுப்புகள் நடத்தியது தவிர வேறு ஏதும் வேலை பார்த்தது இல்லை. மற்றபடி எல்லாக் கோயில் விஷேங்களுக்கும் சென்று, பஜனைப் பாடல்கள் பாடி, கிடைக்கும் ஐந்து ரூபாய், பத்து ரூபாய், வெற்றிலை பாக்கு, பழத்தில்தான் அவரின் ஜீவனம் ஓடியது!

• டி.எம்.எஸ்ஸின் முருக பக்தி அனைவருக்கும் தெரியும் `கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும்....' `உள்ளம் உருகுதய்யா முருகா', `சொல்லாத நாளில்லை சுடர்மிகு வடிவேலா', `மண்ணானாலும் திருச்செந்தூரில் மண்ணாவேன் போன்ற உள்ளம் உருக்கும் பலப்பல முருகன் பாடல்களை இசையமைத்துப் பாடியவர்!

• டி.எம்.எஸ். இசையமைத்துப் பாடிய

`கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்' இன்றளவிலும் நேயர்களால் விரும்பிக் கேட்கப்படும் பக்திப் பாடல். இந்திப் பாடலில் ஒவ்வொரு பாராவிலும் ஒரு குறிப்பிட்ட ராகத்தின் பெயர் இடம் பெறும். அந்தந்தப் பாராவை அந்தந்த ராகத்திலேயே இசையமைத்துச் சாதனை செய்தார்!

• `அடிமை பெண்' படத்தின் போதுதான் டி.எம்.எஸ்ஸின் மகளுக்குத் திருமணம். `பாடி முடித்துவிட்டுத்தான் போக வேண்டும்' என்று எம்.ஜி.ஆர். உத்தரவிட்டும் கோபத்தில் கிளம்பிச் சென்றுவிட்டார் டி.எம்.எஸ். அந்தப் பாடல் வாய்ப்பு, அப்போதுதான் திரையுலகில் இளம் பின்னணிப் பாடகராக நுழைந்திருந்த எஸ்.பி. பாலசுப்பிரமணியனுக்குக் கிடைத்தது. அந்தப் பாடல்தான். `ஆயிரம் நிலவே வா!'

• பொது நிகழ்ச்சிகளுக்குத் தங்க நகைகள் அணிந்து செல்வதில் விருப்பம் உள்ளவர். `இல்லாட்டா ஒருத்தனும் மதிக்க மாட்டான்யா! பாவம், டி.எம்.எஸ்ஸீக்கு என்ன கஷ்டமோ!ன்னு உச்சுக் கொட்டுவான். அதனால, இந்த வெளிவேஷம் தேவையா இருக்கு' என்பார்!

• கவிஞர் வாலியைத் திரை உலகுக்கு அழைத்து வந்தது டி.எம்.எஸ். அந்த நன்றியை இன்று வரையிலும் மறவாமல். `இப்போ நான் சாப்பிடுற சாப்பாடு டி.எம்.எஸ் போட்டது' என்று சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் நெகிழ்வார் வாலி!

• `நீராரும் கடலுடுத்த..' என்னும் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலையும், `ஜன கண மன' என்னும் தேசிய கீதத்தையும் யாரும் பாட முன் வராத நிலையில் டி.எம்.எஸ்ஸீம் பி.சுசீலாவும் இணைந்து பாடித் தந்தது அந்நாளில் பரபரப்புச் செய்தியாக இருந்தது!

• தனலட்சுமி என்ற பெண்ணைக் காதலித்தார். அவர்கள் சற்று வசதியான குடும்பம் என்பதால், டி.எம்.எஸ்ஸீக்குப் பெண் தர மறுத்துவிட்டார்கள். காதல் தோல்வி பாடலைப் பாட நேரும்போதெல்லாம், அந்த தனலட்சுமியின் முகம் தன் மனக் கண்ணில் தோன்றுவதாகச் சொல்வார் டி.எம்.எஸ்!

• `வசந்தமாளிகை' படத்தில் வரும் `யாருக்காக' பாடலை பாடும்போது, அதற்கு எக்கோ எஃபெக்ட் (எதிரொலி) வைக்கச் சொன்னார். `அதெல்லாம் வீண் வேலை' என்று தயாரிப்பாளர் மறுத்துவிட `எக்கோ எஃபெக்ட்' வைத்தால்தான் பாடுவேன் என்றார் கீர்மானமாக. தியேட்டரில் எக்கோ எஃபெக்ட்டுடன் அந்தப் பாடல் பிரமாண்டமாக ஒலித்தபோது ரசிகர்களிடையே எழுந்த கைத்தட்டலைக் கண்டு வியந்தார் தயாரிப்பாளர்!

• வெஸ்டர்ன் டைப்பில் விஸ்வநாதன் இசையமைத்த பாடல் `யாரந்த நிலவு... ஏன் இந்தக் கனவு'. கனத்த குரலுடைய டி.எம்.எஸ்ஸால் இதைப் பாட முடியுமா என்று தயாரிப்பாளருக்குச் சந்தேகம். எதிர்பார்த்தை விட அற்புதமாகப் பாடி அத்தனை பேரையும் அசத்திவிட்டார் டி.எம்.எஸ்!

• காஞ்சிப் பெரியவர், புட்டபர்த்தி சாய்பாபா இருவரிடமும் மிகுந்த பக்திகொண்டவர் டி.எம்.எஸ். இவரது வீட்டுக்கு சாய்பாபா ஒரு முறை வருகை தந்திருக்கிறார். காஞ்சிப் பெரியவர், டி.எம்.எஸ்ஸை `கற்பகவல்லி' பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்து, தான் போர்த்தியிருந்த சிவப்புச் சால்வையைப் பரிசாக அளித்ததைத் தனது பாக்கியமாகச் சொல்லி மகிழ்வார்!

• கடவுள் பக்தி அதிகம் உள்ளவர் டி.எம்.எஸ். கண்ணதாசன் எழுதிய `கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும்: அவன்

காதலித்து வேதனையில் சாக வேண்டும்' என்ற வரிகளைப் பாட மறுத்துவிட்டார். பின்னர், கவிஞர் `சாகவேண்டும்' என்பதை `வாடவேண்டும்' என்று மாற்றித் தந்த பிறகே பாடினார்!

• நீளமான குடுமியும் வடகலை நாமமும் டி.எம்.எஸ்ஸின் ஆதி நாளைய அடையாளங்கள். சினிமாவில் வாய்ப்புத் தேடும் பொருட்டுக் கோயம்புத்தூர் வருவதற்கு முன்பாக, இதே கோலத்தில் தன்னை ஒரு புகைப்படம் எடுத்துக்கொண்டு விட்டு. பின்பு குடுமியை எடுத்துவிட்டுக் கிராப் வைத்துக்கொண்டார். நாமம் அகன்று, பட்டையாக விபூதி பூசியதும் அப்போது தான்!

• எம்.ஜி.ஆர்., சிவாஜி, கருணாநிதி ஜெயலலிதா என அனைவரிடமும் நெருங்கிப் பழகியிருந்தாலும், இன்று வரையில் தனக்காக எந்த ஒரு விஷயத்துக்கும், யாரிடமும் சிபாரிசுக்காக அணுகாதவர்!

• `பாகப் பிரிவினை' படத்தின் 100 வது நாள் விழாவில் இயக்குநர், நடிகர் எனப் பலருக்கும் விருது வழங்கப்பட பாடகர்களுக்கு மட்டும் விருது இல்லை. இது பாரபட்சமானது என்று கருதிய டி.எம். எஸ். விழாவில் `கடவுள் வாழ்த்து' பாட மறுத்துவிட்டார். அதன் பின்னர்தான் பட விழாக்களில் பாடகர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன!

• `நவராத்திரி' படத்தில் சிவாஜி கணேசனின் ஒன்பது வித்தியாச வேடங்களுக்கு ஏற்பத் தன் குரலை வித்தியாசப்படுத்திப் பாடியிருப்பார் டி.எம்.எஸ்!

• `பட்டினத்தார், அருணகிரிநாதர்' என இரண்டு படங்களில் கதாநாயகனாக நடித்திருக்கிறார்!

• மத்திய அமைச்சர் மு.க அழகிரி, டி.எம்.எஸ்ஸின் பரம ரசிகர். காரில் பயணம் செய்யும்போதெல்லாம், டி.எம்.எஸ் பாடிய ஏதாவதொரு பாட்டு ஒலித்துக்கொண்டே இருக்கும்!

• தமிழில் மட்டும் 10,000க்கும் மேற்பட்ட சினிமா பாடல்களைப் பாடியுள்ளார். தவிர, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழி படங்களிலும் சில பாடல்களைப் பாடியுள்ளார். (அவரே இசையமைத்துப் பாடிய பக்திப் பாடல்கள் மேலும் சில ஆயிரங்கள் இருக்கும்.)

• சக பாடகர்கள், தொழிலோடு தொடர்புடையவர்கள் தவிர, தனிப்பட்ட நண்பர்கள் வட்டாராம் என்று டி.எம். எஸ்ஸீக்கு எதுவும் இல்லை.

• எம்.ஜி.ஆர்., சிவாஜி இருவருக்கும் ஏராளமான பாடல்களைப் பாடியிருந்தாலும், அவர்களோடு ஒட்டாமல் தனித்தே கடைசி வரை இருந்தார் டி.எம்.எஸ். சொல்லப்போனால், இருவருக்கும் பலப்பல பாடல்களைப் பாடிய பின்புதான், அவர்களை ஏதேனும் விழாக்களில் நேரிலேயே சந்தித்திருக்கிறார்!

தொகுத்து வழங்குபவர்

திருமதி ஆனந்தி ராம்குமார்

நன்றி மறக்கலாமா



ஈழத்தில் 2009 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது. ஆயுதப்போராட்டம் நடைபெற்ற 30 ஆண்டுகளும், புலம்பெயர்ந்த மக்களின் பங்களிப்பு அளப்பரியதாக இருந்தது என்பது என்றைக்கும் நினைவில் நிறுத்த வேண்டிய ஒன்று. ஈழத்தில் மிகப்பெரிய இனப்படுகொலை நடந்துள்ளது என்பதை உலகநாடுகளின் முன்பு நிரூபிப்பதற்குப் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் பாரிய முயற்சிகளை எடுத்துவருகிறார்கள். மறுக்கமுடியாத சாட்சியங்களைக் உலகத்தின் கண்முன்னால் கொட்டியிருக்கிறார்கள். தொடர்ந்தும் அப்பணியில் ஈடுபட்டும் வருகிறார்கள்.

இந்தத் தொடர் முயற்சிகளின் விளைவாகத்தான், ஈழச்சிக்கல் இன்று சர்வதேசச் சிக்கலாகப் பார்க்கப்படுகிறது. மிகப்பெரிய நாடுகள் ராஜபக்சேவைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த முன்வந்திருக்கின்றன. இவையெல்லாம் பாராட்டுக்குரியன என்பதில் மாற்றுக்கருத்தே இல்லை.

ஆனால் அண்மைக்காலமாகப் புலம்பெயர்ந்த தமிழர்களின் நடவடிக்கைகள் சற்றுக் கவலையளிப்பதாக இருக்கின்றன. 2009க்குப் பிறகு, அதாவது தமிழர்கள் அங்கே லட்சக்கணக்கில் கொன்று குவிக்கப்பட்டு, இனப்படுகொலைக்கான தடயங்கள் அனைத்தும் இலங்கை அரசால் அழிக்கப்பட்ட, மறைக்கப்பட்ட பிறகு, இலங்கைக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

தமிழ்நாட்டில் இருந்து, வியாபாரிகள், எழுத்தாளர்கள், படைப்பாளிகள், உண்மை அறியச் செல்கிறோம் என்னும் பெயரில் பத்திரிகையாளர்கள் எனப் பலதரப்பட்ட மக்கள் அடிக்கடி இலங்கைக்குச் சென்றுவந்து கொண்டிருக்கின்றனர். புலிகளின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இடங்கள், அவர்களின் பதுங்குகுழிகள் உள்ளிட்ட இருப்பிடங்கள், தலைவர் பிரபாகரனின் வீடு போன்ற பகுதிகள், இன்று சுற்றுலா இடங்களாகச் சிங்கள

பேரினவாத அரசால் ஆக்கப்பட்டுள்ளன. சிங்கள மக்கள், தமிழ்நாட்டிலிருந்து செல்லும் தமிழர்கள் என நாள்தோறும், தமிழர்கள் அழிக்கப்பட்டத் தடங்களைப் பார்ப்பதற்கு சுற்றுலா வந்துசெல்கின்றனர். இது குறித்த செய்திகளை பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிகிறது.

ஒரு இனத்தின் அழிவை, படுகொலையைச் சுற்றுலாக் காட்சிகளாக்கி, வருமானம் பார்க்கின்ற கொடூரமான புத்தி இலங்கை அரசுக்கு மட்டுமே உரியது. அதற்கு நாமும் துணை போவதுதான் வேதனையின் உச்சம். எப்படி என்கிறீர்களா?

யுத்தம் காரணமாக, உயிர் பிழைத்தால் போதுமென்று வெறுங்கையுடன் ஓடி வந்த நமக்குத் தஞ்சம் அளித்தவை மேற்குலக நாடுகள். இந்த நாடுகளில் வாழும் நம்முடைய புலம்பெயர்ந்த உறவுகள் அனைவரும், சுதந்திரமாகத் தங்களுக்கு விருப்பமான தொழில்களைச் செய்து வருகின்றனர். தம்முடைய பிள்ளைகள் விரும்புகின்ற கல்வியையும், தடையின்றி வழங்கமுடிகிறது. சற்றேறக்குறைய அந்த நாட்டின் குடிமக்களைப் போன்ற உரிமைகளுடன்தான் நாமும் வாழ்கிறோம் என்பதே உண்மை. சுருக்கமாகச் சொன்னால், அகதிகளாக இருந்தாலும், அவமதிக்காமல், தன்மானத்தோடு வாழ வழிசெய்து கொடுத்துள்ளன இந்நாடுகள்.

ஆனால் நாம் இப்போது என்ன செய்கிறோம்? ஈழத்தில் யுத்தம் முடிந்து விட்டதால், நம்முடைய வீட்டு விசேசங்களை அங்கே போய் நடத்தவேண்டும் என்று நினைக்கிறோம். அதன்படியே செய்யவும் தொடங்கிவிட்டோம். நம் பெண்களின் உடல்களைப் பிணந்தின்னிக் கழுகுகளைப் போலக் கொத்தித் தின்றவர்கள் காலூன்றி நிற்கும் மண்ணில், அவர்களின் அனுமதியைப் பெற்று, பூப்புநீராட்டு விழாவைக் கொண்டாட, இலங்கைக்குப் பறக்கிறோம். அங்குள்ள கோயில்களுக்குப் பணத்தை வாரி வழங்குகிறோம். இலக்கிய சந்திப்புகள், படைப்புகளை வெளியிடுதல் என அங்கே போய்ப் பணத்தைக் கொட்டத் தொடங்கியிருக்கிறோம்.

உலகநாடுகள் எல்லாம் இலங்கைக்குப்



பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று முயற்சி செய்கின்றன. ஆனால் நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? இலங்கை அரசுக்கு அந்நிய செலவாணியை அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இது நாம் வெட்கப்பட வேண்டிய செயல் அல்லவா?

அந்த நாட்டில் நமக்கு என்ன உரிமை இருக்கிறது? அங்கிருக்கின்ற மிச்சம் மீதி தமிழர்களும் அகதி முகாம்கள் என்னும் திறந்த வெளிச் சிறைகளில்தானே இன்னும் இருக்கின்றனர். அவர்களுக்கு ஒரு சிறிதாவது, ராஜபக்சேவின் அரசாங்கம் நன்மை செய்ய நினைக்கிறதா? இல்லையே? பிறகு யாருக்காக, நம்முடைய உழைப்பின் பலனை அங்கே போய் செலவழிக்க வேண்டும் என்பதை மனச்சாட்சியுடன் நாம் எண்ணிப்பார்க்க வேண்டாமா?

இன்றும் ராஜபக்சேயும், சிங்கள பேரினவாதிகளும் இலங்கை சிங்களர்களுக்கு மட்டுமே உரியது என்றும், தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கப் பரிந்துரைக்கும் 13 ஆவது சட்டத் திருத்தத்தை செயல்படுத்த முடியாது என்றும் வெளிப்படையாகவும், உறுதியாகவும்

சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மண் அங்கே அடிமைப்பட்டுக் கிடக்கிறது. நம்முடைய உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் புலம்பெயர்ந்த மக்களான நாம் அங்கு சென்று கொண்டாட்டங்களில் ஈடுபடுவது நமக்குப் பெருமை தரக்கூடியதா என்பதை சற்றே சிந்தித்துப் பாருங்கள்!

ஈழ விடுதலைக்காகத் தங்கள் இன்னுயிரை ஈந்த நம்முடைய மாவீரர்களின் தியாகத்திற்கு நாம் செய்யும் மரியாதை இதுதானா? தங்களுடைய மக்கள் ஈழத்தின் குடிமக்களாக, உரிமைகள் நிறைந்தவர்களாகத் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்று போராடிய மாவீரர்களின் நினைவிடங்களைக் கூட விட்டுவைக்காத அந்த மண்ணில், நாம் பார்க்க வேண்டியது என்ன மிச்சம் இருக்கிறது?

பொருளாதாரப் புறக்கணிப்பு என்பதும் ஒருவகையான யுத்த வடிவம்தான் என்பதை நாம் அறியாதவர்கள் இல்லை. அதனால்தான், சிங்கள தயாரிப்புகளை வாங்காதீர்கள் என்று தொடர்ந்து நாம் வேண்டுகோள் வைத்துக் கொண்டு வருகிறோம். புலம்பெயர்ந்த இடங்களில் இருந்தவாறு இப்படிப்பட்ட நெருக்கடிகளைச் சிங்கள அரசுக்குக் கொடுக்கின்ற பணிகளை நாம் முன்எடுப்பது மட்டுமே, இப்போதைக்கு நமக்கு இருக்கின்ற வாய்ப்பு. பொருளாதாரப் புறக்கணிப்பில் நாம் சரியாக நின்றால்தான், நாடுகள் அளவிலான பொருளாதார தடைகளை இலங்கை அரசின் மீது விதிப்பதற்கு உலகநாடுகளை நாம் நிர்பந்திக்க முடியும். அதைவிடுத்து, நாமே இலங்கை அரசுக்குச் சுற்றுலா அந்நிய செலவாணியை அதிகரித்துக் கொடுத்தால், நமக்கு விடியல் என்றைக்குக் கிடைக்கும்?

இன்று உலக நாடுகள் பலவற்றின் அதிருப்தியை இலங்கை அரசு சந்தித்துக்கொண்டு வருகிறது. எப்படியாவது, தன்னுடைய படுகொலைக் குற்றங்களை மறைத்து, அந்த நாடுகளின் நல்லெண்ணத்தைப் பெற்றுவிட வேண்டும் என்பதில் தீவிரமாக இருக்கிறார் ராஜபக்சே. அதற்காகத்தான் உலக நாடுகளின் தலைவர்கள் மற்றும் முக்கிய ஆளுமைகளுக்கு, இலங்கைக்கு வருவதற்கான அழைப்பு விடுக்கிறார்.

இலங்கைக்கு வெளிநாட்டவரின் வருகை அதிகரித்தால், 'பார்த்தீர்களா இங்கே எந்தப் பிரச்சினையும் இல்லை. நாங்கள் வெளிப்படையானவர்கள். எதையும் மூடிமறைக்கவில்லை' என்று சொல்ல முடியும். அதோடு, புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களும் இலங்கைக்கு வருவதும், போவதுமாக இருந்துவிட்டால், சொல்லவே வேண்டாம். சும்மா ஆடுபவனின் கால்களுக்குச் சலங்கையும் கட்டி விட்டது போல ஆகிவிடும். 'இதோ பார்த்தீர்களா, ஈழத்தமிழர்களே மகிழ்ச்சியுடன் இங்கே வந்து உறவு கொண்டாடுகிறார்கள். நாங்கள் அவர்களை ஒடுக்குவதாகச் சொல்கிறீர்களே!' என்று ராஜபக்சே தன்னை ஜனநாயகவாதியாகவும், இலங்கையை ஜனநாயகமுள்ள நாடாகவும் காட்டிக் கொள்ள நாமே வழி ஏற்படுத்திக் கொடுக்கிறோம் என்பதை தயவு செய்து மறந்துவிடாதீர்கள்.

கை நீட்டி அடைக்கலம் கேட்ட நமக்கு இன்று வசதியானதொரு வாழ்க்கை நிலையை அளித்தவை மேலை நாடுகளே! நம்மைப் பொறுத்தவரை இலங்கை நமக்கு அந்நிய நாடுதான். என்றைக்கும் சுதந்திரத் தமிழ் ஈழம்தான் நம்முடைய சொந்த நாடு. தனி ஈழத்திற்குக் குறைவான எந்த ஒன்றையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று இறுதிவரை களத்தில் நின்று போராடினார்கள் புலி வீரர்கள், நம்முடைய பிள்ளைகள். இன்று மறைமுகமாக இலங்கை அரசுக்கு ஆதரவாகச் சென்று கொண்டிருக்கும் நமது நடவடிக்கைகள், அந்த மாவீரர்களின் தன்னலமற்ற நோக்கத்தைக் குழிதோண்டிப் புதைப்பது போல இருக்கிறது.

உலகெங்கும் சிதறிக் கிடந்த யூதர்கள், தங்கள் ஒற்றுமையின் மூலமாகவே நாடு அடைந்தார்கள். அதுபோன்ற ஒற்றுமை எல்லா நிலைகளிலும் நம்மிடையே இருக்க வேண்டும் என்பதே இன்றை தேவை!

நம் இனத்தைக் கருவறுத்துக் கொண்டிருக்கும், இலங்கை அரசின் தயாரிப்புகளைப் புறக்கணிப்போம். இலங்கைப் பயணங்களைத் தவிர்ப்போம்.

தனிநாயகம் அடிகள்
1913–1980

தமிழ் பண்பாடும் அதன் தாக்கங்களும்

சென்ற இதழ் தொடர்ச்சி

பக்தி

தமிழ், பக்தியின் மொழி என்று நான் அடிக்கடி கூறிவருகின்றேன். ஏனெனில் தமிழிலுள்ள பக்தி இலக்கியங்களைப் போல அழகிலும், ஆழத்திலும், பரப்பிலும் இத்துணை இலக்கியம் வேறெந்த மொழியிலும் இருப்பதாக நான் அறியேன். பரிபாடல் முதலாக, இராமலிங்க சுவாமிகளும் விபு லானந்த அடிகளும் ஈறாக, பக்திப் பாடல்களைப் பாடிய புலவர்கள் எண்ணிறந்தவர்கள். பரிபாடலின்,

யாமிரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல, நின்பால்
அன்பும் அருளும் அறனும் மூன்றும்.
விபுலானந்தருடைய,
வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது

அப்பர் சுவாமிகளின், மாசில் வீணையும் எனும் பாக்களைப் பாடி இன்புறாத தமிழ் மக்கள் இல்லை.

இந்தப் பக்தி இலக்கியம் உண்டாகுவதற்கு நாம் அகத்திணை இலக்கியம் ஒருவாறு துணையாக இருந்திருத்தல் வேண்டும். இன்று தமிழ் மொழியை ஆராயும்பொழுது பக்தியை உணர்த்தும் சொற்கள் பல அமைவதைக் காண்கின்றோம். ஆதலால் சமயப் பொருளற்ற பிறநூல்களிலும் இந்தமொழி ஒலிக்கிறது. எடுத்துக்காட்டாகப் பாரதிதாசன் பாடிய தமிழ்மொழிபற்றிய பாடல்கள் பக்திச் சொற்களை மிகுதியாகக் கொண்டவை. நாயன்மார், ஆள்வார், சேக்கிழார், கம்பர் போன்றவர்களுடைய பக்திப்பண்பு உலகிலேயே நிகரற்றது.

இப்பக்திப் பண்பினை ஏனைய தமிழ்க் கலைகளிலும் காணலாம். தஞ்சாவூர்ப் பெரியகோவில், கங்கை கொண்ட சோழபுரம், இசைக்கலை, பரதநாட்டியம் போன்றவை பக்தியால் இயற்றப்பெற்றவை அல்லது பக்தியால் வளர்ச்சியுற்றவை. இப்பக்தி பிறநாடுகட்டுகும்

பரவியது. இந்தோனேசியாவிலிருக்கும் பிறம்பாணான்பானாத்தரான் கோயில்கள், கம்புச்சியாவிலிருக்கும் சில அரண்மனைகள், சிற்பங்கள், தாய்லாந்தில் கொண்டாடப்படும் திருவெம்பாவைத்திருநாள் இத்தமிழ்ப் பக்தியின் பயனென்றே கூறவேண்டும். உலகம் போற்றும் ஆடவல்லாரின் வடிவம் இப்பக்தியின் பயனென்பதை யார் மறுப்பார்? தமிழர் பண்பாடு பிறநாடுகட்குப் பரவுவதற்குப், பல்லவர், சோழர் படைவீரம் மட்டுமல்ல இப்பக்தியும் காரணமாக அமைந்தது.

ஒழுக்கம்

தமிழர் பண்பாட்டில் பக்தி எங்ஙனம் சிறந்து விளங்கியதோ நீதியும் அவ்வாறு சிறந்து விளங்கியுள்ளது. பாரதியாரின் 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் பெற்ற தமிழ்நாடு' என்னும் கூற்றைச் சிந்திக்கும்பொழுதெல்லாம் அதன் உண்மையை உணர முடிகின்றது. உலகநீதி இலக்கியங்களைச் சிறப்பாக ஆராய்ந்து அரும் பெரும் நூல்களை இயற்றிய அல்பேட் சுவைட்சர் என்னும் மகாத்மா திருக்குறளைப்பற்றி எழுதும்பொழுது "திருக்குறளைப்போல் உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்ட ஒரு நூலை இவ்வுலகில் காண்பது அரிது" என்று குறிப்பிட்டுள்ளார்.

திருக்குறளை அவர் ஜேர்மன் மொழிபெயர்ப்பில் படித்தார். தமிழ் மொழியில் அதனைப் படித்திருந்தால் இன்னும் பன்மடங்கு அதிகமாக அதன் பெருமையை உணர்ந்திருப்பார். திருக்குறளுக்குப்பின் தோன்றிய ஏனைய நூல்களைப்பற்றி நான் குறிப்பிடவேண்டியதில்லை. தமிழை முதற்கற்ற மேனாட்டார் அனைவரும் நம் நீதி நூல்களையே முதலில் போற்றினார்கள். ஒழுக்கமென்பது தமிழர் பண்பாட்டின் ஓர் அடிப்படைக் கொள்கையாக அமைந்து, இன்றும் தமிழர் வாழ்க்கைக்குப் பெரும் அழகையும் மனநிறைவையும் நல்குகின்றது. தமிழ்மக்கள் இத்துனை நூற்றாண்டுகளாகத் தனிநாடுகளில் வாழ்ந்து செழித்தோங்குவதற்கும், அரசியல் வாழ்க்கைக்கும், இவ்வொழுக்கமே துணையாக அமைந்தது. எனவேதான் போப்பையர் இத்துனை நீதிநூல்களை இயற்றிய மக்களுக்குக் கடவுளின் சிறப்பான அருள் இருத்தல் வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் நலக் கொள்கை

இம்மக்கள் நலக் கொள்கையை ஆங்கிலத்தில் Humanism என்று அழைப்பர். (Terence) ரெறன்ஸ் என்னும் இலத்தீன் புலவர், "நான் மனிதன். மனிதனுக்கு இயல்பான எதனையும் நான் வெறுப்பதில்லை" எனக்கூறிய கூற்றை, மேல்நாட்டார் இம்மக்கள் நலப்பண்பின் குறிக்கோளாகப் போற்றுவர். இப்பண்பு நம் பண்பாட்டில் ஓர் அடிப்படைக் கொள்கையாக அமைந்துள்ளது. மனிதனை என்றும் பேணவேண்டுமென்றும், ஒரு செயலால் வரும் பிற நலன்களைக் கருதாமல் நன்மையை, நன்மைக்காகவே செய்யவேண்டுமென்றும் உணர்ந்த தமிழ்ப்

புலவர்கள்பலர்,

"இம்மை செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகனாயலன்" *(புறம் 134)*

என்றும்,

"மேலுலகம் இன்றெனினும் ஈதலே நன்று"

என்றும் வற்புறுத்தியுள்ளனர் நம் புலவர்.

பண்டைக்கால இலக்கியங்களில் இவ்வுலக வாழ்க்கையும், மக்களோடு இன்புற்று ஒழுகுவதும், இல்லறத்தின் இனிய நலன்களைக் காண்பதும், வாழ்க்கையின் நோக்கங்களாகக் கருதப்பட்டன. புறநானூற்றில்

அமிழ்தம் இவைவதாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே.....
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர்.....
அன்னை மாட்சிய னையராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலும் உண்மையானே *(புறம் 182)*

என்ற செய்யுளில் தமிழர் பண்பாட்டின் அடிப்படைக் கொள்கைகளைக் காணலாம். சங்க இலக்கியத்துக்கும், வடமொழியில் இயற்றப்பெற்ற பழைய இலக்கியங்கட்கும் உள்ள பெரும் வேற்றுமை இம் மனித நலக் கொள்கையே. ஆதலால்தான் மேல்நாட்டு அறிஞர் தமிழ் இலக்கியத்தின் "Life Affirmation" வாழ்க்கை வலியுறுத்தல் எனும் பண்பைப் போற்றுகின்றனர்.

மக்கள் நலப் பண்பில் சிரிப்பென்பது மக்களின் சிறந்த ஓர் இயல்பு. ஆதலால்தான் புலவர்கள் நட்பைப் பற்றியும், சிரிப்பைப் பற்றியும் எப்பொழுதும் போற்றிப் புகழ்ந்துள்ளனர். இந்நூற்றாண்டின் ஆங்கிலப் புலவர் ஒருவர் பாடுகின்றார்.

"From quiet homes and first beginning

Out to the undiscovered ends

There's nothing worth the wear of winning

But laughter and the love of friends"

திருவள்ளுவர் சிரிப்பைப்பற்றிக் கூறும் இடங்கள் நமக்கு வியப்பைத் தருகின்றன.

"நகல்வல்லார் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும் பாற் பட்டன்று இருள்" *(திரு. 999)*

ஈராயிரம் ஆண்டுகட்கு முன் எந்நாட்டுப் புலவரும் இவ்வாறு கூறியிருப்பரோ என்பது ஐயம்தான்.

பிறர் அன்பு

மனிதநலப் பண்பிலிருந்து பிறக்கும் ஓர் இயல்பு பிறரன்பு. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்னும் இலட்சியம் எக்காலத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதுவே சான்றோருடைய பெரும் இயல்பு. என் கடன் பணிசெய்து கிடப்பதே எனப் பிற்காலத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்வுலகம் உறுதியாக நிலைத்திருப்பதற்கு இத்தகைய கொள்கையுடைய சான்றோர் இருப்பதே காரணம். இந்நூற்றாண்டில் சாதி வேற்றுமைகளை ஒழிக்க வேண்டுமென்றும் மக்களினத்தின் ஒற்றுமையை நிலைநிறுத்த வேண்டுமென்றும் விளக்கும் இயக்கங்கள் இக்கொள்கையிலிருந்தே தோன்றின. பிறருக்குப் பணிசெய்யும் மனநிலை இப்பண்பின் பயனே.

இயற்கை

தமிழ் மக்களுக்கு இயற்கையிலிருந்த ஈடுபாடும், இயற்கையை செய்யுளுக்குப் பின்னணியாக அமைக்கும் முறையும், நமக்குப் பெரும்வியப்பைத் தருகின்றது. சங்க இலக்கியத்தையும், இடைக்கால இலக்கியத்தையும் பயில்கின்றவர்கள் தமிழரின் இயற்கை ஈடுபாட்டை ஆழமாக உணர்வார்கள். தொல்காப்பியப் பொருளதிகாரம் இத்துனை நுணுக்கமாக இயற்கையைப் புலனெறி வழக்கிற்கு அமைத்ததுபோல வேறெந்த இலக்கியத்திலும் அமைத்ததாகத் தெரியவில்லை. ஐந்திணைக்குப் பண்டைத்தமிழர் கொடுத்த பெயர்கள் அவர்கள் எத்துனை அளவிற்கு இயற்கையோடு வாழ்ந்தார்கள் என்பதைக் காட்டுகின்றது.

மலையையும் மலைசார்ந்த இடத்தையும் குறிஞ்சி என்று அழைப்பதற்கு எத்துனை காலம் சென்றிருக்க வேண்டும். பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை மலைச்சாரலில் பூக்கும் இச்செடியை மலைப்பகுதிகட்குப் பொருத்தமான ஒரு பெயராகக் கருதினார்கள். இவ்வாறே பிறநிலங்கட்கும் பெயரிட்டனர். மலர்களையும், மாலைகளையும் அவர்கள் பயன்படுத்திய முறை அவர்களுடைய அழகு ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றது. அன்பிற்கும் மலர்களைக் கையுறையாகக் கொடுத்தனர். போரின் வெவ்வேறு பிரிவுகட்கும் வெவ்வேறு அடையாளப் பூக்களைக் கையாண்டனர். நம் பழைய இலக்கியங்களில் முல்லையைப் பற்றியும், காந்தளிர்பற்றியும், கொன்றையைப்பற்றியும் புகழும் செய்யுட்கள் பெருமின்பம் தருகின்றன. முல்லை சார்ந்த கற்பினள் என்றும், முல்லை நாறும் கற்பினள் என்றும் வருமடிகளில் முல்லைமலர் எவ்வாறு கற்பிற்கு அடையாளமலராக அமைந்தது என்பதைக் காட்டுகின்றது. முல்லைமலரை அணிசெய்யப் பலமுறைகளைக் கையாண்டனர். புறநானூற்றில் வருமிந்தச் செய்யுள் நம் நினைவில் என்றும் நிலைத்திருக்கத் தகுதிவாய்ந்தது.

இளையோர் சூடார், வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான், பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க்கடங்க
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே
(புறம் 12)

தமிழின் மறுமலர்ச்சிக் காலத்திலும் இவ்வியற்கை ஈடுபாடு குறையவில்லை. பாரதியார், பாரதிதாசன், தேசியவினாயகம்பிள்ளை போன்றோருடைய இயற்கை ஈடுபாடு அவர்கள் பாடல்களில் தெளிவாகத் தோன்றுகின்றது. வேதநாயகம்பிள்ளை மிக அழகாக இயற்கையையும் இறைவனையும் இணைத்துப் பாடியுள்ளார்.

கதிரவன் கிரணக் கையாற்
கடவுளைத் தொழுவான் புட்கள்
சுதியொடும் ஆடிப் பாடித்
துதி செயும் தருக்கள் எல்லாம்
பொதி அலர் தூவிப் போற்றும்
பூதம் தம் தொழில் செய்தேத்தும்
அதிர் கடல் ஒலியால் வாழ்த்தும்
அகமே நீ வாழ்த்தா தென்னே.

நம் மக்கள் நம் பண்பாட்டிலும் இயற்கை ஈடுபாட்டினை இழந்துவிடுதலாகாது. மலர்களையும் மாலைகளையும் இறை வழிபாட்டிற்கும், வாழ்க்கையின் பல நிகழ்ச்சிகட்கும், தொடர்ந்து பயன்படுத்தி வர வேண்டும். நம்மில்லங்களில் மல்லிகை முல்லை மலர்ச் செடிகளை வளர்த்துப் பேணுதல் வேண்டும்.

நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும்

தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் இருந்த அரசுகள் வெவ்வேறு அரசுகளாக இயங்கித் தமக்குள் சிலவேளைகளில் போரில் ஈடுபட்டிருந்த போதிலும், தாம் அனைவரும் ஓரினத்தைச் சார்ந்தவரென்றும் தமிழ் இணைப்பதாகவும் கருதிவந்தனர். பெருநில மன்னரும் குறுநில மன்னரும் தம் எல்லைகட்குள் அரசு செலுத்தி வந்தாலும்,



தம்மனைவரின் நாட்டையும் தமிழகமென்றும், பொதுமை சுட்டிய மூவருலகமென்றும் அழைத்தனர். தமிழ்மொழியே அன்னாருடைய ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் வழிவகுத்தது. தமிழ்நாட்டின் எல்லைக்கப்பால் இருந்த நாடுகளை "மொழிபெயர் தேயம்" என்று அழைத்தனர். புறநானூறும் சிலப்பதிகாரமும் இவ்வாற்றலைப் புலப்படுத்தும் இடங்கள் பல. கனகவிஜயர் தமிழர் வீரத்தை ஏளனம் செய்தகாலை,

"தென்தமிழாற்றல் அறிந்திலராங்கு" என்று கூறிச் சேரர் வடநாட்டின்மீது படையெடுத்தனர் தமிழ் மக்களுக்குத் தம் சொந்த அரசின் பற்றோடு, தமிழ்நாட்டுப்பற்று என்னும் எல்லாத் தமிழ் அரசுகளையும் அடக்கியபற்று இயல்பாக அமைந்திருந்தது. தமிழ்ப்பாணரும் புலவரும் குறுநில மன்னரிடமும் பெருநில மன்னரிடமும் சென்று அன்னாரை வாழ்த்திப் பரிசில் பெற்றனர். இளங்கோ அடிகள் மூவேந்தரின் ஒவ்வொரு நாட்டின் சிறப்பையும் பாடியுள்ளார். நாயன்மார், ஆழ்வார் வடமொழி இலக்கியத்திலிருந்து, சமயக் கொள்கைகள் சிலவற்றைப் பயின்றாலும் தமிழ்நாட்டுப்பற்றையும் அவர்கள் தெளிவாகத் தம் பாடல்களில் காட்டியுள்ளனர். இவ்விருவகைப்பற்று நமக்கும் ஒரு பாடமாக அமைகின்றது. ஈழநாட்டில் வடபகுதியும், கிழக்குப் பகுதியும், மலைநாட்டுப்பகுதியும் தம் தனித்தனி இயல்புகளைப் பாராட்டி வந்தாலும், தமிழ் மக்கள் என்ற முறையில் பண்டைக்கால ஒற்றுமை முறையை நாம் தழுவவேண்டும். தமிழ் மக்கள் இத்துனை நூற்றாண்டுகளாகத் தழுவிய சமயங்கள் பல. ஆயினும் எச்சமயத்தைச் சார்ந்தாலும் தாம் தமிழ் மக்கள் என்று தமிழர் பண்பாட்டையும் கொள்கைகளையும் அவர்கள் கடைப்பிடித்தே வந்தனர். இன்றும் கடைப்பிடித்தே வருகின்றனர்.

நம்மிலக்கியத்திலும் கலைகளிலும் தோன்றும் தாய்மொழிப்பற்றினைப்பற்றி நான் விரிவாகக் கூறவேண்டியதில்லை. சேக்கிழாருடைய பெரியபுராணத்தை நான் படிக்கும் பொழுதெல்லாம் அவருடைய உருக்கம் நிறைந்த தமிழ்ப்பற்று என்னுள்ளத்தைக் கவர்கின்றது தமிழ் என்ற

சொல் வருமிடங்களிலெல்லாம் அழகும் அன்பும் நிறைந்த அடைமொழிகளை அமைத்தே கூறுவார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடங்கிய மறுமலர்ச்சி இம்மொழிப்பற்றை இன்னும் விளக்கமாக எடுத்துக்காட்டியுள்ளது. வேதநாயகம்பிள்ளை, பரிதிமால்கலைஞன், சுந்தரம்பிள்ளை, மறைமலையடிகள் போன்றவர்கள் இப்பற்றினைத் தம்நூல்களில் தெளிவாகக்காட்டுகின்றனர். பேராசிரியர் சேதுப்பிள்ளையின் நூல்களில் தமிழின் இனிமை பக்கந்தோறும் இனிக்கின்றது. ஆயினும் இம்மொழிப்பற்றினை பாரதியாரும், பாரதிதாசனும் என்றும் மறக்கமுடியாத செய்யுட்களில் பாடியிருக்கின்றனர்.

பாரதியாரின் "செந்தமிழ் நாடென்னும்" செய்யுள் வரலாற்று உண்மை நிறைந்த அரிய செய்யுள். அவருடைய 'யாமறிந்த மொழிகளிலே' என்னும் செய்யுள் தமிழர்கட்கு எழுச்சி தரும் செய்யுள். இவ்விரு செய்யுட்களையும் நம் சிறுவருடைய பாடநூல்களிலே எது காரணம் பற்றி சேர்க்காமலிருக்கிறார்களோ நானறியேன். நம்மொழிப்பற்றையும், நாட்டுப்பற்றையும் குறைப்பதற்காகவே இவ்விருட்டடிப்பு ஒரு சூழ்ச்சி என்று கருதுகின்றேன்.

அரசியலாட்சி

தமிழ் நாடும் தமிழ் அரசுகளும் இத்துனை நூற்றாண்டுகளாக உலக வரலாற்றில் சிறந்து விளங்குவதற்குக் காரணமாக இருந்தது தமிழரின் நீதி தழுவும் ஆட்சிமுறையே. நெல்லும் உயிரன்று, நீரும் உயிரன்று, மன்னன் உயிர்த்தே மலர்த்தலை உலகம்" என்ற குறிக்கோளும், "மாதவர் நோன்பும், மடவார் கற்பும், காவலன் காவல் இன்றெனின் இன்றாம்" என்ற கொள்கையும் ஆட்சிக்கு அடிப்படையாக இருந்த கொள்கைகள். தமிழராட்சி முறைகளைக் கூறுவதென்றால் இச்சொற்பொழிவு நீளும். ஆயினும் ஆட்சியமைப்பும் பண்பாட்டின் ஒரு பகுதியாதலால் அதைக் குறிப்பிட விரும்புகின்றேன். மார்க்கோபோலோ என்ற இத்தாலியர் தமிழ் நாட்டிற்கு வந்த காலத்தில் சோழருடைய ஆட்சியையும் தமிழ்நாட்டு வணிகவளத்தையும் கண்டு "சோழநாடு இந்தியாவின் மிகப்பெருமைவாய்ந்த உன்னத அரசு" என்று குறிப்பிட்டார்.

கவின் கலைகள்

கவின் கலைகள் பண்பாட்டில் சிறந்த இடம் பெறுகின்றன. தமிழ் மக்கள் எழுப்பிய கோயில்கள், அமைத்த கோபுரங்கள், செதுக்கிய சிலைகள், வளர்த்த இசையும் நாட்டியமும் அவர்களுடைய அழகுக்கலையின் ஈடுபாட்டுக்குச் சான்றுகளாக மிளிர்கின்றன. ரொடான் (Rodin) என்னும் பிரான்சிய நாட்டுச் சிற்பி ஆடவல்லாரின் சிலையை வியந்து போற்றியுள்ளார். இவ்வாறு நம்மெல்லாக் கலைகளும் உலகின் மதிப்பைப் பெற்றுள்ளன. நம்மக்களின் கலையீடுபாடு குறைந்து வருவதற்கு நாம் ஒருபோதும் இடமளித்தல் ஆகாது. ஈழநாட்டில் எத்தனையோ கட்டிடச் செல்வங்களை அந்நியராட்சிக் காலத்தில் நாம் இழந்துள்ளோம். மீண்டும் அழகுச் சின்னங்களை நிறுவுவது ஒரு பெரும் தொண்டாகும். அத்தகைய ஒரு சின்னத்தைத் தந்தை செல்வாவின் நினைவுக்கு நம்தலைநகரில் நிறுவியது போற்றத்தக்கது.

தொடரும்

தனிநாயகம் அடிகள்
ஆற்றிய உரையைத்
தமிழர் தகவல்
வாசகர்களுக்கு
வழங்குகிறோம்.

அறிவுமதி கவிதைகளில் தமிழின உணர்வும் பெண்விடுதலையும்

நவீன இலக்கிய வரலாற்றை ஆய்வு செய்யும் எந்தவொரு ஆய்வாளனும் இலக்கியத்தில் திராவிட இயக்கம் செலுத்திய தாக்கம் குறித்துப் பேசுவது தவிர்க்கவியலாதது. பெரியாரிடமிருந்து உருப்பெற்ற திராவிட இயக்கச் சிந்தனைகள், அண்ணா, கருணாநிதி, சி.பி. சிற்றரசு, டி.கே. சீனிவாசன், மதியழகன், ஈ.வி.கே.சம்பத் போன்றோரின் எழுத்துகளில் வெளிப்பட்டன. மேற்சுட்டப்பட்ட திராவிட இயக்கப் படைப்பாளிகள் கட்சி இதழ்களில் புதினங்களின் வாயிலாகவும், நாடகங்களின் வாயிலாகவும் திராவிட இயக்கச் சிந்தனைகளைப் பரப்பி வந்தனர். ஆனால், இவர்களின்

நோக்கம் கட்சியின் கொள்கைகளை மக்களிடம் பரப்புதல் என்பதாக இருந்தது. அதேசமயம், மாறுபட்ட கதைப்பொருளும், மொழியும் இவர்களின் படைப்புகளில் காணப்பட்டதையும் மறுக்கவியலாது.

கவிதையைப் பொறுத்தவரை பாரதிக்குப் பிறகு வந்த பாரதிதாசன் திராவிட இயக்கக் கவிஞர்களில் முதன்மையானவர். 1938ஆம் ஆண்டு அவருடைய முதல் கவிதைத் தொகுதி வெளிவந்தபோது கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான கவிஞராக இனங்காணப்பட்டார். திராவிட இயக்கத்தின்வழி வந்த முக்கியமான நூல் இது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பின்னர், பாரதிதாசனைப் பின்பற்றி 1970கள் வரை ஏராளமான கவிஞர்கள் எழுத வந்தனர். தமிழ்ச் சூழலில், புதுக்கவிதை இயக்கம் தோன்றுவதற்கு முன்புவரை, திராவிட இயக்கக் கவிதை ஓர் இயக்கமாகவே செயல்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தகுந்தது.

சாதி மறுப்பு, கடவுள் மறுப்பு, மத எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, பெண்விடுதலை என்பவை திராவிட இயக்கக் கவிஞர்களின் கவிதைகளில் மையப்பொருள்களாக விளங்கின. இன்றைக்குத் தீவிர இலக்கியம் பேசும் சிறுபத்திரிகைகளில் இயங்கிக் கொண்டிருக்கும் நவீன கவிஞர்கள் பலரும் ஏதோ ஒருவகையில் திராவிட இயக்கக் கவிஞர்களின் தாக்கம் பெற்றவர்களாகவே இருப்பர் என்பதில் ஐயமில்லை.

இக்கட்டுரை, திராவிட இயக்கச் சிந்தனைகள் வேரூன்றிய குடும்பத்தில் பிறந்த கவிஞர் அறிவுமதியின் கவிதைகளில் வெளிப்படும் தமிழினவுணர்வு, பெண்விடுதலைச் சிந்தனைகள் ஆகியவற்றை ஆராயும் நோக்கில் எழுதப்பட்டுள்ளது.

அறிவுமதியின் படைப்புச்சூழல்

தமிழ் இலக்கியச் சூழலில், திரைப்படப் பாடலாசிரியராக அறியப்படுபவர் கவிஞர் அறிவுமதி. 'எங்கே செல்லும் இந்தப் பாதை...', 'பிரிவொன்றைச் சந்தித்தேன் முதன்முதல் நேற்று...', 'தீபங்கள் பேசும் இது கார்த்திகை மாசம்', 'தோம் தோம் தித்தித்தோம் தொலைவில் இருந்தே சந்தித்தோம்' முதலான திரைப்படப் பாடல்களின் மூலம் அநேக ரசிகர்களைச் சென்றடைந்தவர். திரைப்படப் பாடலாசிரியர் என்பது ஒருபுறம் இருந்தாலும், கவிதைத் தொகுப்புகளையும், சிறுகதைத் தொகுப்பு ஒன்றையும் வெளியிட்டு, இலக்கியவாதியாகவும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டுள்ளார். அவிழரும்பு முதலிய 13 கவிதை நூல்களையும், வெள்ளைத் தீ என்னும் சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். அதுமட்டுமின்றி, நீலம் என்னும் குறும்படத்தினையும் இயக்கியுள்ளார். ஆண், பெண் நட்பைப் சிலாகித்துப் பேசுகின்ற நட்புக்காலம் என்னும் கவிதைத்தொகுப்பு அவரின் குறிப்பிடத்தகுந்த நூலாகும். புல்லின் நுனியில் பனித்துளி என்னும் ஹைக்கூ தொகுப்பு, தமிழ் ஹைக்கூ வகைமைக்கு அறிவுமதியின் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பாகும்.

திராவிட இயக்கத்தின் தாக்கம் பெற்ற கவிஞர்களுள் ஒருவராக அறிவுமதியை அடையாளம் காணமுடியும். 'அவிழரும்பு' என்னும் கவிதைத் தொகுப்பிற்கு அறிவுமதி எழுதியிருக்கும் முன்னுரையை வாசிக்கிற எந்தவொரு வாசகனும் இதனை எளிதில் உணரலாம்.

கடவுள் நம்பிக்கையும், பகுத்தறிவுவாதமும் ஒருசேர இருந்த குடும்பத்தில் பிறந்தவர் அறிவுமதி. அறிவுமதியின் தந்தை ஒரு பகுத்தறிவுவாதி. சு. கீணனூர் கிராமத்தின் தி.மு.க. செயலாளர்; சிறந்த ஓவியர்; கதாசிரியரும்கூட. ஆனால், அம்மா, தாத்தா போன்ற குடும்ப உறுப்பினர்கள் அவருக்கு நேர் எதிரானவர்கள். வீட்டுத் தெய்வங்களுக்குப் படைத்து முடிக்காமல் எந்தப் பொருளையும் தொடக்கூடாது என்கிற மரபார்ந்த சடங்குகளை விடாமல் பாதுகாத்து வருபவர்கள்.

"பயம் கலந்த அந்தச் சூழலிலும் வரிசையாக மாட்டப்பட்டிருக்கும் சாமிப் படங்களுக்குக் காட்டப்படும் தீபாராதனை பக்கத்தில் மாட்டப்பட்டிருக்கும் அண்ணா, கலைஞர், பேராசிரியர், நாவலர், ஆசைத்தம்பி, சிற்றரசு, இராமாமிர்தத்து அம்மையார் ஆகியோரது படங்களின் பக்கம் போகையில் களுக்கென சிரிப்பேன். அம்மா வாயைப் பொத்துவார்" என்ற அறிவுமதியின் வார்த்தைகளிலிருந்து இதனை அறியலாம்.

அம்மாவிடமிருந்து தாலாட்டு, ஒப்பாரி, கதைகள், சொலவடை, தெம்மாங்கு முதலிய நாட்டுப்புற இலக்கிய வடிவங்களை உட்செரித்துக் கொண்ட அறிவுமதி, தன் தந்தையிடமிருந்தே திராவிட இயக்க எழுத்துகளை உள்வாங்கிக் கொண்டார். சிறுவயதிலிருந்தே நம் நாடு, திராவிட நாடு, முரசொலி, முத்தாரம், தென்னகம், தென்றல், இனமுழக்கம், கலைமன்றம், நடிகன் குரல், விடுதலை முதலிய இயக்க இதழ்களும், நூல்களும், தலைவர்களின் உரைகளும் வாசிக்க வாய்ப்புப் பெற்றிருந்த காரணத்தினால் தமிழ் மொழியுணர்வும், தமிழின உணர்வும் அவரது எழுத்துகளில் செயல்படுகிறது எனலாம். சாமியாடும் தாத்தாவின் பேரனாக வளர்ந்த அறிவுமதி, பின்னாளில் பெரியாரின் பிள்ளையாகத் தன்னை அறிவித்துக் கொண்டார். திராவிட இயக்கம், கட்சியாக உருப்பெற்ற பின்னர், அதன் போக்குகளில் அறிவுமதிக்கு அத்தனை உடன்பாடு இருக்கவில்லை. திராவிட இயக்கத்தின் மீதான பக்தியையும் பற்றையும் மறுபரிசீலனை செய்யத் தொடங்கினார்.

"தனது கையால் தண்ணீரைக் கூட எடுத்துக் குடிக்க முடியாத நிலையில்... மரணம் சிறுகச் சிறுகத் தின்று கொண்டிருக்கும் அவனது அம்மா, "எவனுக்கு ஓட்டுப் போட்டுத்தான் என்ன பலன் கண்டோம்? என்று அப்பாவித்தனமாய்க் கேட்கும் கேள்வியில் அந்தச் சின்னஞ் சிறிய புன்னகையும் தொலைந்து போகிறது. அதனால்தான்... அவனது அப்பா சார்ந்திருக்கும் இயக்கத்தையும் விமர்சிக்கும் அளவிற்கு அவன் வளர்ந்திருக்கிறான்" என்றும், "என்ன வேதனை... சாமியாடும் தாத்தாவின் பேரனாய்... களுக்கெனச் சிரிக்கையில் அன்று அம்மா, வாயைப் பொத்தினார்கள். இன்று தந்தை பெரியாரின் பிள்ளையாய்... எம் இனத்திற்காக, மொழிக்காக, ஈழத்திற்காகக் குரல் கொடுக்க முனைந்தால்... எந்த இயக்கம் எனக்குள் இன உணர்வையும் மொழி உணர்வையும் ஊட்டியதோ அந்த இயக்கமே வந்து என் வாயைப் பொத்துகிறது"

என்றும் கூறுவதிலிருந்து, அறிவுமதிக்குள் செயல்படும் திராவிட இயக்கச் சிந்தனைகளையும், திராவிட இயக்கக் கட்சி மீதான விமர்சனப் பார்வையையும் அறியலாம்.

தமிழ்மொழியுணர்வு

உலகளாவிய நிலையில் மனிதனுக்கான அடையாளமாக மொழி மட்டுமே இருக்கும். தமிழனுக்கான அடையாளமும் மொழியில்தான் இருக்கிறது. தமிழ்த் திரைப்படப் பாடல்களாக இருந்தாலும் சரி, தமிழ்ப் புதுக்கவிதையாக இருந்தாலும் சரி, ஆங்கிலம் கலக்காமல் எழுத வேண்டும் என்ற முன்தீர்மானத்தோடு இயங்கிக் கொண்டிருக்கிறார் அறிவுமதி. தமிழ்மொழி மீதான அதீதப் பற்று அவரது எழுத்துகளிலும், சிந்தனைகளிலும் வெளிப்படுகின்றன. தமிழன். மணியன் இணையதளத்தில் அறிவுமதி தன்னைப் பற்றிப் பின்வருமாறு கூறிக் கொள்கிறார்.

"எனக்குள் அமெரிக்காவைத் திணிக்க நகரம் எவ்வளவோ முயற்சி செய்கிறது. ஆங்கிலம் கலந்த பாடல் எழுதத் தெரியுமா? என்கிறது. ஊத்தாவுக்குள் சிக்கிய விறால்மீன் உள்நுழைந்து துழாவும் கைகளுக்கு அகப்படாமல் நழுவிப் போவதாய், நான் தப்பித்துக் கொண்டிருக்கிறேன். அம்மாவை விற்றுத்தான் பிள்ளைகளுக்குச் சோறு போட வேண்டுமா என்கிற தவிப்பில் திமிறிக் கொண்டிருக்கிறேன்."

தமிழ் மொழியில் பிற மொழியை, குறிப்பாக ஆங்கிலத்தைக் கலந்து எழுதுவதில் அறிவுமதிக்கு எப்போதும் உடன்பாடு இல்லை.

தமிழ்மொழி, செம்மொழித் தகுதி பெற்றிருக்கும் இந்தச் சூழலில், அறிவுமதியின் பின்வரும் கவிதை கவனிக்கத்தக்கது. தமிழ்மொழி ஏன் செம்மொழி என அழைக்கப்படுகிறது என்பதைப் பின்வருமாறு எழுதுகிறார்.

"செல்லும் இடமெல்லாம் / செருப்படி / வாங்கி /சிவப்பாய் குருதி வழியும் / உதடுகளால் /பேசப்படுவதால்!"

இக்கவிதையின் நோக்கம் தமிழ்மொழியைக் குறைத்து மதிப்பிடுவது அன்று. தமிழர்கள், வயிற்றுப் பிழைப்புக்காகப் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று வாழ நேர்கிறது. அவ்வாறான சூழலில் தமிழர்கள் அடித்துத் துன்புறுத்தப்படுகின்றனர். மேலும், தமிழ்மொழி, பல்வேறு அரசியல் காரணங்களால் இரண்டாம்பட்சமாக நடத்தப்படுகிறது. அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஆதங்கத்தின் வெளிப்பாடேயாகும்.



தமிழ்மொழியில் பேசினால் அபராதம் வசூலிக்கும் பள்ளிகளைத் தமிழ்நாட்டில் பரவலாகப் பார்க்க முடியும். 'இங்குத் தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்' என்ற வாசகத்தையும் தமிழ்நாட்டுக் கோவில்களில் பார்க்கலாம். ஆங்கிலத்தில் பேசுகிற குழந்தைதான் அறிவாளிக் குழந்தை என்கிற பொதுப்புத்திக் கருத்தியல் நடுத்தர வர்க்க மக்களிடமும், படிக்காத பாமர மக்களிடமும் காணப்படுகிறது. 'பிழைக்கும் வழி' என்னும் தலைப்பில் அமைந்த கவிதை, தமிழ்மொழியுணர்வைப் பேசுகிற அதேநேரத்தில், மொழிப்பற்றற்று வாழும் தமிழனை விமர்சனமும் செய்கிறது.

"மொன்னைத் தமிழனே! / முதலில் அன்னைத் / தமிழை / அறவே மற! மற! / பிழைக்க வேண்டுமா? / ஆங்கிலம் கற்றுக்கொள் / அது போதுமா என்றா / கேட்கிறாய்! / போதும் போதும் / அதுமட்டும் போதும்! / ஆனால் / உயிர் பிழைக்க வேண்டுமா? மும்பை என்றால் / மராத்தி / கற்றுக் கொள் / கர்நாடகம் என்றால் / கன்னடம் / கற்றுக் கொள் / கொழும்பு என்றால் / சிங்களம் / கற்றுக் கொள்"

தமிழர்கள் சுயசிந்தனையற்றவர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள் / மாறிவிட்டார்கள் என்கிற விமர்சனமும், தமிழனின் மொழி அடையாளம் அழிந்து கொண்டு வருகிறது என்கிற வருத்தமும் இக்கவிதையில் பதிவாகியுள்ளது.

தமிழை ஒழுங்காக உச்சரிக்கத் தெரியாமல் தப்பும் தவறுமாகப் பேசும் பிறமொழியாளர்களின் பேச்சுகளைத் தமிழர்கள் கைதட்டி இரசிப்பதுண்டு. அவர்களும் எந்தவிதக் குற்றவுணர்வும், தயக்கமும், தாழ்வுமனப்பாண்மையும் இன்றி, தமிழைப் பேச எத்தனிக்கின்றனர். ஆனால், ஆங்கிலத்தையோ, இந்தி, மலையாளம், தெலுங்கு போன்ற பிறமொழிகளையோ பேசுவதற்குத் தமிழர்கள் தயக்கப்படுவதையும், அம்மொழியினைச் சரியாகப் பேச வராத சூழலில் தாழ்வுமனப்பாண்மைக்கு உள்ளாவதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தேர்தல் சமயங்களில் வடக்கிலிருந்து தலைவர்கள் பிரச்சாரம் செய்வதைப் பின்வரும் கவிதையில் கடுமையாகச் சாடியுள்ளார் அறிவுமதி.

"தேர்தல் பிரச்சாரம் / வடக்கு சொல்கிறது 'வண்..க்கம்' / செருப்பாலடி"

இங்கு, வடக்கிலிருந்து தலைவர்கள் வந்து பேசுவதும், பிரச்சாரம் செய்வதும் அறிவுமதிக்குப் பிரச்சனை அல்ல. தமிழை ஒழுங்காக உச்சரிக்கத் தெரியாத ஒருவனைக் கொண்டு ஆதாயம் தேடிக் கொள்ளும் தமிழக அரசியல்வாதிகளின் செயலையே கடுமையாக விமர்சிக்கிறார் அறிவுமதி.

அறிவுமதியின் தமிழ் மொழியுணர்வை முழுமையாகப் புரிந்துகொள்ள 'கடைசி மழைத்துளி' என்னும் கவிதைத் தொகுப்பின் முன்னுரையில் இடம்பெற்றுள்ள சில வரிகளை இங்குத் தருவது பொருத்தமாக இருக்கும்.

"மின்மினிப் பூச்சிகளற்ற கருவேல மரம் பார்க்க எப்படி என்னால் முடியாதோ.. அப்படியே தமிழ் அடையாளங்களை இழந்த தமிழ்நாட்டைப் பார்க்க என்னால் இயலாது"

அறிவுமதியின் இவ்வரிகள், அவரது மொழிப்பற்றுக்கு மற்றுமொரு தக்க சான்றாகத் திகழ்கிறது.

தொடரும்

வியக்க வைக்கும் பிரபஞ்சம் 3

சூரியன்

வானம் பரந்து விரிந்த எல்லையற்ற ஒரு பெரும் அண்ட வெளி. அதில் சூரியன்தான் கதாநாயகன். அவன் குடும்பம் மிகப் பெரியது. அவன் ஆட்சி எல்லையற்றது. அவன் இடும் கட்டளைகள் எல்லாம் கட்டளைகள்தான். அதை மாற்ற வேறொரு சக்தி அங்கில்லை. ஆனால் அவன் ஆட்சி மிகச் சிறந்தது. அவன் புகழ் பாட நீண்ட வரிசைககள் தோன்றுவதை என்றும் காணலாம். இனி அவன் புகழ் பாடலைக் கேட்போம், பார்ப்போம்.

சூரியன் பிறப்பு

நம் சூரியன் சுமார் 460 கோடி (460,00,00,000) ஆண்டுகளுக்குமுன் தோன்றினான் என்பது விஞ்ஞானிகளின் கணிப்பாகும். இனி, சூரியன் பிறந்த கதையையும் காண்போம். ஒரு கருநிலைக் கோட்பாட்டின்படி 460 கோடி ஆண்டுகளுக்குமுன் ஒரு கிட்டிய நட்சத்திரம் விசையால் அழிக்கப்பட்டு அந்த வெடிப்பொலி அதிர்வு அலைகளைக் கதிரவன் முகிற் படலமூலம் வெளியேற்றி அதற்குக் கோணமுடக்கான இயங்கு விசையைக் கொடுத்தது. இது முகிற்சுழற்சி, ஈர்ப்பு, செறிவு ஆகியவற்றை விரைவுபடுத்தியது. இதனால் செறி தொகுதிகள் கெட்டியடைந்து மத்தியில் வெப்பம் பெருகியது. இவ்வெப்பம் வெளியேற முடியாது மேலும் மையவெப்பம் கூடிக்கொண்டது. ஈற்றில் நீர்வாயு கீலியமாக அணுமாற்றம் பெற்று ஒரு நட்சத்திரம் தீப்பிடித்து எரிந்து ஒரு சூரியன் உருவாயிற்று.

அதே நேரத்தில் சூரியக் கோள்களும், சிறு கோள்களும், குறுங்கோள்களும், பாறைகளும் தோன்றின. சூரியன் அன்றிலிருந்து இற்றைவரை பிரகாசித்து எரிந்துகொண்டு எல்லா உயிரினங்களையும் காத்து வருகின்றான். எனவே சூரியன் இன்றேல் நாம் வாழும் பூமியும் இல்லை. ஏன் மற்றைய எட்டுக் கிரகங்களும் இயங்காது அழிந்து விடும். சூரியன் ஒரு கோளவடிவம் கொண்டது. மேலும் சூரியன் மிகச் சூடான நிணநீரையும் கொண்டுள்ளது.

இன்னும் சூரியனின் ஆயுள் காலத்தை ஆயிரம் கோடி (1,000,00,00,000) ஆண்டுகள் என்றும் கணித்துள்ளனர். எனவே சூரியன் இன்னும் 540 கோடி (540,00,00,000) ஆண்டுகள் வாழ்வான் என்பது தெளிவாகின்றது.

சூரியன் விவரம்

சூரியன் பூமியைவிட மிகப் பிரமாண்டமானது. சூரியனில் சுமார் பத்து இலட்சம் (10,00,000) பூமிகளை அடக்கலாம். சூரிய குடும்பத்திலடங்கிய அத்தனை பொருட்களையும் சூரியனில் வைத்தாலும் அது ஒரு சதவிகித இடத்தையே நிரப்பக் கூடியது.

சூரிய மண்டலத்தில் 73.5 சதவீத ஐதரசனும், 25.0 சதவீத ஹீலியமும் உள்ளன. எஞ்சிய 1.5 சதவீதத்தில் பிராணவாயு, கரியமிலவாயு, கந்தகம், வெளிமம், வெடியம், கன்மம் ஆகியன அடங்கும்.

சூரியன் ஓர் அணு உலை போல் இயங்கிப் பிரமாண்டமான சக்தியையும், ஒளியையும் தொடர்ந்து தந்த வண்ணம் இருக்கிறது. இவ்வணு உலையில் ஐதரசன்



அணுக்கள் ஹீலியமாக மாற்றப்பட்டு, பல வகைக் கதிர்களாய் நாலா பக்கமும் சக்தியாகவும், வெளிச்சமாகவும் பரவி உலக உயிரனைத்தையும் காத்து வருகின்றது. ஒவ்வொரு வினாடியும் அறுபத்திரண்டு கோடி (62,00,00,000) தொன் ஐதரசன் ஹீலியமாக மாற்றப்படுகின்றது.

இனி, சூரியனின் வெப்ப நிலையைப் பார்ப்போம். சூரியன் நடுவில் (மையம்) வெப்ப நிலை 1.6 கோடி சென்டிகிரேட் பாகையாகவும், மேற் பரப்பில் வெப்ப நிலை 5,600 சென்டிகிரேட் பாகையாகவும் உள்ளதெனக் கணிக்கப்பட்டுள்ளது.

சூரியனின் விட்டம் சுமார் 13,90,000 கிலோ மீற்றராகும். இது பூமியின் விட்டத்தின் 109 மடங்காகும். சூரியனின் நிறை சுமார் 1,98,90,00,00,00,00,00,00,00,00,00,00,00,00 0 (1,989ஒ1024) தொன்களாகும். இது பூமியின் நிறையின் 3,33,000 மடங்காகும். சூரியனின் சுற்றளவு 43,79,000 கி.மீ. ஆகும். இது பூமியின் சுற்றளவிலும் பார்க்க 109 மடங்கு கூடியது. பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள தூரம் சுமார் 14.9 கோடி கிலோ மீற்றர் ஆகும். ஒளியின் வேகம் ஒரு செக்கனுக்கு 297,600 கி.மீ. (186,000 மைல்) ஆகும். இதன்படி பார்த்தால் சூரியனிலிருந்து புறப்படும் ஒளிக் கீற்று பூமியை வந்தடைய எட்டு (08) நிமிடம் பத்தொன்பது (19) செக்கன் ஆகும்.

'சூரியன் கிழக்கில் வந்து உதிக்கின்றான். மேற்கில் போய் மறைகின்றான்.' இவை

பாடசாலையில் படித்த, படிக்கின்ற பாடங்கள். பாடப் புத்தகங்களிலும் இவ்வாறு தான் எழுதப்பட்டுள்ளன. ஆசிரியர்களும் இப்படித் தான் சொல்லிப் படிப்பித்தார்கள்: படிப்பிக்கின்றார்கள். பாவலரும், நாவலரும், கவிதை, எழுத்து, இலக்கியம் ஆகியவற்றில் ஆக்கங்களை இவ்வாறே வடித்தும,; பாத்தொடுத்தும் வருகின்கின்றனர். எவரும் இதை மறுத்துக் கூறியதில்லை. இன்னும் நம் கண் பார்வைக்கும் சூரியன் அவ்வாறுதான் தோற்றமளிக்கின்றான். ;ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!! என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சூரியனைப் பற்றிக் கூறியுள்ளார்.



ஆனால், சூரியன் அசையாது ஓர் இடத்தில் நிலைத்து நிற்கின்றானென்றும், பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருப்பதால் சூரியன் அசைவது போல் தோன்றுகின்றானென்ற உண்மையை விஞ்ஞான ஆய்வுகள் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளன.

இதை ஒரு விளக்கம் மூலம் பார்ப்போம். பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றுகின்றான். இதனால் ஏற்படும் அசைவு நமக்குப் புலன்படாதபடியால் பூமி நிலைத்து நிற்கிறதென்றும் சூரியன்தான் அசைந்து வருகின்றானென்றும் நினைக்கின்றோம். சூரிய வெளிச்சம் பூமியின் ஒரு பக்கத்தில் விழும்பொழுது அங்குள்ளோருக்கு அது பகலாகும். அதே நேரம் மறுபக்கப் பூமியில் சூரிய வெளிச்சம் தெரிவதில்லை. அந்த நேரம் அங்குள்ளோருக்கு இரவாகும். இரவைக் கழித்தவர்கள் முதல் முதலில் சூரியனைக் காண்பது காலை நேரம் என்றும், சூரியன் உச்சியில் தோன்றும் நேரம் மதியம் என்றும், சூரியன் ஒளி தெரியாது மறைந்து போகும் நேரம் மாலை என்றும் கூறுவர். இவ்வண்ணம் பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கு ஒருமுறை பகல், இரவு வந்து போகும்.

மேலும், உற்று நோக்கின், சூரியன் நிலைத்து ஓர் இடத்தில் தரித்து நிற்பதில்லையென்றும், இப் பரந்த பால் நிலா வெளியில் நீண்ட ஒரு சுற்றுப் பாதையில் ஒவ்வொரு 2535 நாட்களுக்கு ஒரு தரம் 1.994 கி.மீஃசெ (1.994 மஅஃள) வேகத்தில் சுற்றி வந்து இருபத்தைந்து (25) கோடி ஆண்டுகளில் ஒரு சுற்றுச் சுற்றி வருகின்றானென்ற உண்மையையும் முதிர் நிலை விஞ்ஞான ஆய்வுகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

இன்னும், இதுவரை சூரியன் இப் பாதையில் பதினெட்டு (18) சுற்றுக்கள் சுற்றி நானூற்றி ஐம்பது (450) கோடி ஆண்டுகளை எட்டிப் பிடித்து, நடு வயதை அடைந்துள்ளானென்றும், மேலும் 22 சுற்றுச் சுற்றி வந்தால் (அதாவது இன்னும் 550 கோடி ஆண்டுகள் சென்ற பின்) சூரியன் வாழ் நாள் முடிவுற்றுப் பயங்கர வெப்ப நிலையடைந்து வெடித்துச் சிதறி இறந்து விடுவானென்றும், விஞ்ஞானம் கூறி நிற்கின்றது. அப்பொழுது, புதன், வெள்ளி ஆகிய கிரகங்கள் நீராவியாகிக் கரைந்து விடும். நமது பூமியும் எரிந்து சாம்பலாகி விடும். மற்றைய கிரகங்கள் உறை நிலையடைந்து விடும். இக் காலப் பகுதியில் இயற்கை என்ன மாற்றத்தைக் கொண்டுவருமோ என்பதை இருந்துதான் பார்க்க வேண்டும்.

சில மனிதர்களும் சில நியாயங்களும்



சில மனிதர்கள் சிலவேளைகளில் தங்களுக்கென்றே சில நியாயங்களை உருவாக்கிக்கொண்டு வாழ எத்தனிக்கிறார்கள். இங்கே உறவுகளின் ஆழத்தைப் பற்றியோ அல்லது உறவுகளின் நெருக்கங்கள் பற்றியோ அவர்கள் கவலைப்படுவதில்லை. சமூகத்தின் முன்னால் தங்களை ஒரு சமூகவாதியாகக் காட்டிக்கொண்டு தங்களுக்காகவே வாழ்பவர்கள் இவர்கள். இவர்கள் மற்றவர்களுக்காகக் கவலைப்படுவது போல் தோற்றுவார்கள் ஆனால் கவலைப்படுவதில்லை. இப்படியான இவர்களை சமூகம் இனங்கண்டு கொள்வதுமில்லை பழிப்பதுமில்லை. இப்படியான மனிதர்கள் கூடுதலாக மத்தியதர வர்க்கத்தில்தான் காணப்புடுகின்றனர்.

எமது கதைமாந்தர்களில் மகேந்திரத்தார் இந்த வகையைச் சேர்ந்தவர் என்றுதான் கருதவேண்டியுள்ளது.

ஆரண்யா தனது பக்க நியாயத்தை சத்தமாக எடுத்துரைத்தபோது நிரம்ப நியாயங்கள் அவள்பக்கம் தலையாட்டலாம்போல்தான் இருந்தன.

இங்கே ஆத்தித்யாவின் பாசம் ஆரண்யாவின் பாசத்தோடு கலந்த கோபம் சாரங்கனின் நழுவல் நியாயங்கள் மதிவதனியின் இயலாமையும் துணிவும் ஒன்றொடொன்று போராடும் தன்மை கொண்டனவாகத்தான் இருக்கின்றன.

ஆரண்யா ஒரு பறவையைப்போன்றவள். தான் விரும்பியபடி எல்லாம் பறக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவள். சில வேளைகளில் இரவு நேரத்தில் வீட்டுக்கு வரமாட்டாள். தன் நண்பி வீட்டில் படுத்துவிட்டேன் என்று சாக்குச் சொல்லி தாயைச் சமாளித்துவிடுவாள். மதிவதனியும் இவற்றை கணவனுக்கும் சொல்வதில்லை ஆதித்யாவுக்கும் சொல்வதில்லை. ஆனால் தன்னுடைய அண்ணனான கமலநாதனுக்குச் சொல்லிவிடுவாள்.

இந்தக் கமலநாதன் தான் மதிவதனி இந்த நாட்டுக்கு வருவதற்குக் காரணமாக இருந்தவர். அவருடைய முயற்சியால்தான் இன்று இவர்கள் சந்தோசமாக இருக்கிறார்கள். இதனால்தான் தனக்கு என்ன நடந்தாலும் அண்ணனுக்குப் போன் பண்ணிச் சொல்லிவிடுவாள் மதிவதனி.

ஆரண்யாவின் இந்த நடத்தை மதிவதனிக்கு நிரம்பக் கவலையைக் கொடுத்தது. தற்செயலாக ஏதும் பிழையாக நடந்துவிட்டால் அம்மாவின் வளர்ப்புப் பிழையென்று இந்தச் சமூகம் சொல்லுமென்று பயப்பிட ஆரம்பித்துப் பலநாட்களாகிவிட்டன. மனச்சாட்சிக்குப் பயப்பிடுவதைவிட சமூகத்துக்குப் பயப்பிடுவதுதான் வழக்கமாக இருக்கிறது.

அன்று ஆரண்யா சிறிது பதட்டமாகவே இருந்தாள். அவளின் பதட்டத்துக்கான



காரணம் மதிவதனிக்குப் புரியவேயில்லை. கேட்கவும் பயமாக இருந்தது. சுள்ளென்று பாய்ந்து விழுவாளென்ற பயம். என்றாலும் தாயென்ற நிலையில் சும்மா இருக்கமுடியாதே வருவது வரட்டும் என்று "ஆரண்யா ஏதும் பிரச்சினையே! ஒருமாதிரிப் பதட்டமாக இருக்கிறாய்" என்று கேட்டாள்.

ஆரண்யா பதிலேதும் சொல்லவில்லை. மதிவதனி திரும்பவும் கேட்டாள்.

"உங்கடை உதவி தேவையெண்டால் கேட்பன்தானே. உங்கடை அலுவலைப் பார்த்துக் கொண்டிருங்கோ என்று எரிந்து விழுந்தாள். இதை மதிவதனி எதிர்பார்த்தவள்தான்.

இரவுச் சாப்பாடு செய்வதற்காக சமயசைக்குள் சென்றாள். சமயறைக்குச் சென்றாலும் அவளின் காது மட்டும் ஹோலுக்குள்தான்.

ஆரண்யாவுக்கு ஒரு தொலைபேசி வந்திருக்கவேண்டும் அல்லது

மீண்டும் புதினம் வந்துவிட்டது

ஆரண்யாயாருக்கோ எடுத்திருக்கவேண்டும். கதைத்துச் சத்தம் கேட்டது. மெதுவாகக் கதவோரம் வந்து காதைக் கொடுத்துக் கேட்டாள். முழுவதுமாகக் கேட்கவில்லை.

ஏதோ வெளியில் எடுக்க முடியாதோ என்ற சொல்லும் ஏன் எட்வேட் மாட்டன் எண்டு சொன்னவர் என்ற சொல்லும் அவளுக்குக்கேட்டது.

யார் இந்த எட்வேட்? யாரை வெளியில் எடுக்க வேணும்? மதிவதனி குழம்பிவிட்டாள்.

படுக்கையறைக்குள் சென்று தொலைபேசியை எடுத்து ஆதித்யாவின் எண்ணைச் சுழற்றினாள்.

ஆதித்யாதான் போனை எடுத்தாள் " நான் அம்மா கதைக்கிறன்" என்றவுடன் ஆதித்யா சிறிது நேரம் ஒன்றுமே கதைக்கவில்லை. தான் அம்மாவை தும்புபறக்கப் பேசினதுதான் ஞாபகத்துக்கு வந்தது. அதற்குப் பிறகு இப்போதான் அம்மா எடுத்திருக்கறாள்.

கோபத்தை மறைத்துக் கொண்டு என்ன அம்மா என்றாள் ஆதித்யா. மதிவதனியும் நடந்த விடயங்களை அவளுக்குக் கூற ஆதித்யா கலங்கிப்போனாள். ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு ஆரண்யா கூறிய வார்த்தைகளையும் நடந்த சில சம்பவங்களையும் கோர்த்துப் பார்க்கும்போது ஒரேஒரு விடயம் ஆதித்யாவுக்கு நன்கு புரிந்தது.

சாரங்கனின் மாமா பையனுக்கும் ஆரண்யாவுக்கும் இடையில் ஏதோ தொடர்பு இருக்கவேண்டுமென்பதுதான்.

எவ்வளவு பிரச்சினையான விடயம். இந்த விடயத்தை தாய்க்குக் கூறாமல் வேறு எதனையோ கூறிச் சமாளித்துவிட்டாள்.

பிரச்சினைமட்டும் மண்டையைக் குடைந்து கொண்டிருந்தது. ஏதும் செய்தாகவேண்டும். என்ன செய்வது? எதற்கும் சாரங்கன் வரட்டும் என்று காத்துக்கொண்டிருந்தாள்.

மணி அடித்துக் கேட்டது. சாரங்கன்தான் வந்திருந்தான். மாமாவைக்காணவில்லை. "போன காரியம் சரிவரவில்லை."

"எனக்கு அப்பவே தெரியும் டேவிட் மாட்டனெண்டு சொன்னது" என்று ஆதித்யா கூறியதும் சாரங்கனுக்கு வியப்பாக இருந்தது.

ஆதித்யா முழுவிடயத்தையும் அவனுக்கு ஒப்புவித்தாள். சாரங்கனுக்கு வியப்பாகவும் அதே நேரம் பயமாகவும் இருந்தது. மாமாவின் பையன் ஒழுங்கானவன் இல்லை. கூடாத நட்புகளொடு கூடி கெட்டுப் போயிருந்தான். இப்போ அவன் அகப்பட்டிருப்பதும் பெரியதொரு விடயம். டேவிட் முடியாதென்றெ சொல்லி விட்டார். குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டால் சிறைத்தண்டனையோடு நாடுகடத்தப்படக் கூடிய சூழலும் உண்டு என்று கூறிவிட்டார். மாமாவுக்கு; நிரம்பிய கவலை.

வீட்டுக்கு வந்தால் இப்படியொரு இடி. என்ன செய்வதென்றே சாரங்கனுக்குப் புரியவேயில்லை.

சாரங்கனும் ஆதித்யாவும் ஒன்றுமே கதைக்கவில்லை. அமைதியாகச் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

(இன்னும் வரும்...)

உணவில் சேர்க்கும் மசாலாப் பொருட்களின் நன்மைகள்!

இந்தியாவில் உணவுகளின் சுவைக்காகச் சேர்க்கப்படும் மசாலாப் பொருட்களில் நிறைய நன்மைகள் உள்ளடங்கியுள்ளன. இத்தகைய பொருட்களை உப்பிற்கு பதிலாகவும் சேர்க்கலாம். பொதுவாக இந்தப் பொருட்கள் பிரியாணிகளில் அதிகம் சேர்க்கப்படும். பெரும்பாலானோர், இவற்றை வெறும் வாசனைப் பொருளாகவும், காரத்திற்கு சேர்க்கும் மசாலாப் பொருளாகவும் மட்டும் தான் பார்க்கின்றனர்.

ஆனால் இத்தகைய மசாலாப் பொருட்களை அளவாக உணவில் அவ்வப்போது சேர்த்து வந்தால், நிறைய நன்மைகளைப் பெறலாம். அதுவே நன்மை அதிகம் உள்ளது என்று அளவுக்கு அதிகம் சாப்பிட்டால், பின் செரிமானப் பிரச்சனை அல்லது சில சமயங்களில் அல்சர் போன்றவை கூட ஏற்படும்.

சரி, இப்போது உணவில் வாசனைக்காகவும், காரத்திற்காகவும் சேர்க்கும் ஒவ்வொரு மசாலாப் பொருட்களின் நன்மைகளைப் பற்றிப் பார்ப்போமா!

பட்டை

இந்த நறுமணப் பொருளை உணவில் சேர்த்தால் ஒரு சூப்பரான சுவையைப் பெறலாம். பொதுவாக இதனை குழம்பு, புலாவ், பிரியாணி போன்றவற்றில் பயன்படுத்துவார்கள். இந்த பொருள் நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் சிறந்தது. ஏனெனில் இதனை அவர்கள் சாப்பிட்டால், அளவுக்கு அதிகமாக இன்சுலின் சுரப்பதைத் தடுத்து, தேவையான அளவு மட்டும் சுரக்கும். மேலும் இதனைச் சாப்பிட்டால், செரிமான பிரச்சனை, இருமல், வயிற்றுப் போக்கு, மோசமான இரத்த சுழற்சி, மாதவிடாய் சுழற்சியின் போது ஏற்படும் டென்சன் போன்றவை சரியாகும்.

கிராம்பு

இந்தியாவில் உள்ள அனைவருக்குமே கிராம்பை நன்கு தெரியும். அதிலும் இதனை உணவில் வாசனைக்காகச் சேர்ப்பதோடு, பல் பிரச்சனைகளை குணப்படுத்தும் ஒரு சிறந்த பொருளும் கூட. மேலும் அளவுக்கு அதிகமாக உணவை சாப்பிட்டோ மற்றும் ஆல்கஹால் அருந்தியோ அவஸ்தைப்படுவோர், ஒரு கிராம்பை எடுத்து வாயில் போட்டு மென்று சாப்பிட்டால் சரிசெய்துவிடும். கிராம்பு , வாந்தி, செரிமானப் பிரச்சனை, வயிற்றுப் போக்கு போன்றவற்றையும் குணமாக்கும்.

சீரகம்

பெரும்பாலான உணவுகளில் சீரகம் சேர்க்காமல் சமைக்கமாட்டார்கள். சீரகம் உடலுக்கு குளிர்ச்சியைத் தரும் ஒரு பொருள். அதுமட்டுமின்றி, இது செரிமானப் பிரச்சனை, அனீமியா, இருமல், பைல்ஸ் மற்றும் அதிகமான இரத்த அழுத்தம் போன்றவற்றை சரிசெய்யும்.

கருப்பு ஏலக்காய்

கருப்பு ஏலக்காய் வேறு, பச்சை ஏலக்காய் வேறு. பொதுவாக இந்தக் கருப்பு ஏலக்காய் புலாவ் மற்றும் பிரியாணிகளில் தான் பயன்படுத்துவார்கள். ஏனெனில் பிரியாணிகளில் அதிகப்படியான எண்ணெய் இருப்பதால், வயிறு உப்புசத்துடன் இருக்கும். எனவே இந்த கருப்பு ஏலக்காய் சேர்த்தால், அந்தப் பிரச்சனை வராமல் இருக்கும். மேலும் இந்தக் கருப்பு ஏலக்காய் தொண்டை பிரச்சனை, நெஞ்செரிச்சல், ஈறு பிரச்சனை போன்றவற்றிலிருந்து விடுபட வைக்கும். ஆஸ்துமாவால் அவஸ்தைப்படுவோருக்கு நல்ல நிவாரணம் தரும்.

குங்குமப்பூ

பொலிவான சரும அழகைத் தரும் குங்குமப்பூ, பொதுவாக நிறத்திற்காகச் சேர்க்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக பிரியாணி, இனிப்பு பதார்த்தங்கள் போன்றவற்றில்தான் பயன்படுகிறது. குங்குமப்பூ மிகவும் விலை மதிப்புள்ளது. அதற்கேற்றாற் போல், இதன் நன்மைகளும் எண்ணற்றவை. ஏனெனில் குங்குமப்பூ அழகிற்குப் பயன்படுவதோடு, உடல் நலத்தில் மன இறுக்கம், மன அழுத்தம், பார்வை கோளாறு மற்றும் ஞாபக சக்தி போன்றவற்றை சீராக வைக்கவும் உதவுகிறது.

ஜாதிக்காய்

இதுவும் கிராம்பு போன்ற ஒரு நறுமணப் பொருள்தான். இதுவும் பல் பிரச்சனை, அல்சிமியர் போன்றவற்றை சரிசெய்வதோடு,



ஞாபக சக்தியையும் அதிகரிக்கிறது. மேலும் இது பசியின்மையைப் போக்கும் ஒரு சிறந்த பொருளும் கூட. பெரும்பாலும் இது நிறைய நாட்டு மருந்துகளில் பயன்படுகிறது.

மிளகு

அனைவருக்குமே மிளகு எவ்வளவு காரமாக உள்ளது என்பது தெரியும். இத்தகைய மிளகு, உணவுக்குச் சுவையையும், காரத்தையும் கொடுப்பதோடு, உடலில் ஹைட்ரோகுளோரிக் ஆசிட் உற்பத்தியை அதிகரித்து, செரிமானத்திற்கு பெரிதும் துணைபுரிகிறது. மேலும் இருமல், தொண்டை கரகரப்பு, மலச்சிக்கல் போன்ற பிரச்சனையால் பாதிக்கப்பட்டாலும், மிளகு ஒரு நல்ல தீர்வைத் தரும்.

பகுதி 2

தமிழ்த்திரை இசையில் ராகங்கள்

”தமிழ் நாட்டில் பழங்காலத்திலிருந்தே இராக முறையைப் பண் முறை என்றும், இராகங்களைப் பண்கள் என்றும் அழைத்து வந்திருக்கிறார்கள். முழு வடிவமும் முழுமையான அகல நீளமும் கொண்ட இராகங்களை பண்கள் என்றும் இவற்றிலிருந்து தோன்றுகிற சேய் இராகங்களை பண்திறம் என்றும், பண் திறத்திறம் என்றும் தமிழர்கள் தொன்று தொட்டு அழைத்து வந்திருக்கிறார்கள். எனவே, பண்முறை என்பது தமிழரின் இசை முறைக்கு மற்றொரு பெயர்” என்பார் மீ.ப.சோமசுந்தரம்.

இசையறிஞர் வீ.பா.கா .சுந்தரம் அவர்கள் அழகாக விளக்குவார்.

“ஏறு நிரலும் இறங்கு நிரலிலும் தனக்குரிய கோவை வரிசைகளைக் கொண்டு நிறம் தொடரக் [உயர்ச்சி தோன்ற] கமகங்கள் ததும்பக் கோவைகளை விரித்து வளர்த்துப் பாடுவதே பண்’’. “பண்ணப்படுவது பண் எனலாம்.”

கோவைகளை கோத்து சுவைகள் தோன்றப் பண்ணப்பட்டமையால் பண் எனப் பெயர் பெற்றது.வெறும் கோவைகளை கோத்து விடுவதால் பண் அமைந்து விடாது. ஒவ்வொரு கோவையையும் நீட்டியோ, குறுக்கியோ, வளுக்கியோ, அசைத்தோ ஒலிப்பதால் எண் சுவைகள் தோன்றும். இவ்வாறு பண்ணப்பட்டது பண் என வெவேறு நூல்களில் பண் குறித்து குறிப்புக்கள் அமைந்துள்ளதை காண முடிகிறது.”

பண் என்பது தமிழில் பல பொருள்களில் வருகிறது. பண் என்பது இசை என்ற பொருளிலும் குறிப்பிடப்படுகிறது.

1. "**பாட்டிடை கலந்த பொருள வாகிப்**

பாட்டின் இயல பண்ணத் தியே" - தொல்காப்பியம் - [தோல்: செய்; 173]

பண்ணைத் தோற்றுவிப்பதால் பண்ணத்தி என்கிறார் தொல்காப்பியர்.

2. "**ஆடல் பாட லிசையே தமிழே**

பண்ணே பாணி தூக்கி முடமே" சிலம்பு: [அரங்: 45 46]

3. "**பண்ணியாழ்க் கரணமும் பாடைப்பாடலும்**" - மணிமேகலை - ஊரலுரை: 20

4. "**பண்என்ஆம் பாடற்கு இயைபுஇன்றேல் கண்என்ஆம்**

கண்ணோட்டம் இல்லாத கண் " - குறள் :573 ராகம் என்ற பொருளில்

5. "தாளத்தோடு பொருந்திய இயற்றமிழ் பாவினோடு இசையை இயைத்துப் பாடும் போது அது திறம் தோன்ற அதாவது பண் அல்லது ராகம் தோன்ற இனிமையாக ஒலிக்கிறது. பழந்தமிழ் மக்கள் பண் என்று அழைத்ததை நாம் இப்போது ராகம் என்று அழைக்கிறோம்." - து.ஆ.தனபாண்டியன்

6. "**நிறை நரம்பிற்றே, பண்ணெனலாகும்**" - சேந்தன் திவாகரம்

7. "**பாட்டின் பெயரும் பரிமாக்கலனையும் நாட்டிய பண்ணும் பண்ணென நவில்வர்** - பிங்கலநிகண்டு [இசைப்பாட்டு என்ற பொருளில்]

8. "**பண்ணென்ப பாட்டும் பண்ணும்பரிமாவின் கலணையும்**" [இசைப்பாட்டு என்ற பொருளில்]

9. "**இசை, இசைப்பாட்டு, ஏழு சுரம் உள்ள இசை, யாழ் முதலிய கருவிகள், ஓசை ,கூத்துவகை, தமிழ் தமிழ் அகரமுதலி** - மு.சண்முகம்பிள்ளை.

என பண் பற்றிப் பலவிதமான கோணங்களிலும் விவரிக்கப்பட்டிருக்கிறது.

ஆனாலும் ராகம் என்பது தமிழ் சொல் என்றும், அராகம் என்ற மூலச் சொல்லிருந்து உண்டானது என்றும் வேர்ச் சொல்லியல் ஆய்வாளர் திரு.ப.அருளி கீழ் கண்டவாறு விளக்குவார்.

"உர் என்ற சொல் தமிழில் ஒலிக்கான மூலம். உரை என்பது ஒலியிடு என்பதாகும். உர் என்கிற சொல் உரவு என்று வரும். உரவு என்பது ஒலியைக் குறிக்கும்.

முடங்கு என்பது மடங்கு என்று வரும்,

முயங்கு எனபது மயங்கு என்று வரும்,

குடம் என்பது கடம் என்று வரும்,

முயங்கு என்பது மயங்கு என்று வருவதுபோல உரவு என்பது வந்தது.

உரவு என்கிற சொல் அரவு. அரவு என்றால் ஒலி என்று அர்த்தம். அரவு + அம் = அரவம் [என்ன ஆள் அரவம் கேட்கிறது] பாம்பு வகையில் சீறும் பாம்புக்கு அரவம் என்று பெயர்உண்டு. "நாம நல் அரா "என்றால் நல்ல பாம்பு என்று அர்த்தம். அரவம், அராவனம், அராவம் என்பது ஒலி ஆகும். சிவப்பு என்பதை சிகப்பு என்பது போல அராவம் என்பதை அராகம் என்பது போல அந்த அராகத்தில் "அ " வை அகற்றிவிட்டு ராக என்று மாற்றினார்கள்."

மேலும் அவர் தொடர்கிறார்.

ராகம் என்பதற்கு வடமொழி சொல்லகராதியில் "ரஞ்" என்கிற சொல்லிலிருந்து வருவதாக குறிப்பிடுகின்றனர். "ரஞ்" என்பதின் பொருள் நிறம், சாயம், சிவப்பு நிறம், அடர்த்தி, பற்று, விளைவு, மகிழ்ச்சி, இரக்கம், அழகு. அழகிலிருந்து வந்ததாக முடிக்கிறார்கள்.

"**ராகம் என்பதற்கு நேரடியான விளக்கம் வட மொழியில் இல்லை**" என்பார் இசைப் பேராசிரியர் கோ.வைத்திலிங்கம்.

சங்க இலக்கியத்தில் கலிப்பா என்ற பாடல் அமைப்பில் ஒரு உறுப்பு அராகம் என்றழைக்கப்படுகிறது. பிங்கல நிகண்டு தரும் பின்வரும் பாடல்

"அராக நேர்திற முறுப்புக் குறுங்கலி

யாசா னைந்தும் பாலையாழ்த் திறனே."
என்ற குறிப்பையும் தருகிறது.

முடகு என்பதும் அராகம், வண்ணம், அடுக்கியல் என்ற அர்த்தத்தில் வரும் என்பார் இசை ஆய்வாளர் மம்மது.

முடுகும் ராகம் என்பதை நெகிழ்ந்த ஒசையவாகிய நெட்டெழுத்துக்கள் விரவாது குற்றெழுத்துகளால் இயன்று இடையறவு படாது பாடப்படுவது என்பர். அதுமட்டுமல்ல பல்வேறு அமைப்பில் அமைக்கப்பட்ட தேவார திருபதிகங்களில் "திருவிராகம்" என்றும் குறிப்பிடப்படுகின்றன.

திருவிராகம் என்பதில் இருந்தே ராகம் எனும் சொல் பிறந்தது என்று சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

ராகம் என்பது தமிழ் சொல்லே.இதனை வட மொழி என்றால் தமிழில் இருந்து திரிக்கப்பட்ட, திருடப்பட்ட ஏராளமான சொற்க்களில் ஒன்று என கொள்ளலாம். கால ஓட்டத்தில் மொழிகளுக்கிடையிலான முயங்குதலின் விளைவாகவும் இருக்கலாம். ஆயினும் சமஸ்கிருதத்தில் இருக்கின்ற ஏராளமான சொற்கள் [50 வீதம்] தமிழ்ச் சொற்கள் என்று சொல்வார் தேவநேயப் பாவாணர். அதுமட்டுமல்ல வட மொழியில் இருப்பன எல்லாம் தமிழர்களுக்கு சொந்தமானவை அல்ல என்பதிலும் உண்மை இல்லை எனபார்.

யாழ் என்பது பெரும்பண் ஆகும். மருத யாழ், பாலை யாழ், நெய்தல் யாழ், முல்லை யாழ், குறிஞ்சி யாழ் என வாழ்ந்த நிலங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டன என்பர்.இவை மட்டமல்ல ச. ரி, க, ம, ப, த, நி போன்றவையும் தமிழில் உண்டானதே! சிலப்பதிகாரத்தில் ஊர்காண் காதை என்ற பகுதியில் கீழ் வரும் பாடல் உள்ளது.

'ச ரி க ம ப த நி யென்று ஏழெழுத்தால் தானம்

வரிபரந்த கண்ணினாய் வைத்துத் - தெரிவரிய

ஏழிசையும் தோன்றும் இவற்றுள்ளே பண்பிறக்கும்

சூழ்முதலாம் சுத்தத் துளை'

இந்த ராகங்களுக்கு உயிர் கொடுப்பவை சுரங்களில் பொதிந்திருக்கும் கமகங்கள் ஆகும். இந்த கமகங்களே பிற நாட்டு இசையிலிருந்து நமது இசையை துல்லியமாக வேறுபடுத்திக்காட்ட உதவுகின்றது.

இதனை பழந் தமிழ் இலக்கியங்களில் உள்ளோசைகள் என அழைத்தனர். இந்த உள்ளோசைகளை எவ்விதம் பாட வேண்டும் என்ற குறிப்பையும் சிலப்பதிகாரம் பதிவு செய்துள்ளது.

வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல்

சீருடன் உருட்டல், தெருட்டல், அள்ளல்

ஏறுடைப், பட்டடை என இசையோர் வகுத்த

பட்ட வகைதன் செவியின் ஓர்த்த [சிலப்பதிகாரம் 17 கானல்வரி 12 6]

தமிழ் மக்களின் இந்த இசையை, ராகங்களை வளர்த்தவர்கள் பாணர்கள் என்று அழைக்கப்பட்டனர். அறிஞர் தேவநேயப் பாவாணர் **"இசைத் தமிழ்த் தொன்மை"** என்ற கட்டுரையில் பின் வருமாறு விளக்குவார்.

"மேற்கூறிய இசைக் கருவிகளையெல்லாம் தொன்றுதொட்டுச் செய்து வந்தவரும் இயக்கி வந்தவரும் தனித் தமிழரே. அவர் பாணர், மேளக்காரர் (நட்டுவர்) என இரு வகுப்பினர். இசைத் தெய்வத் திற்கே மாதங்கி (பாடினி) என்றுதான் பெயர்.

பண்டைத் தமிழ்நாட்டில் இசைத்தமிழைச் சிறப்பாய் வளர்த்து வந்தவர் பறையருள்

ஒரு பிரிவினரான பாணரே. இதனாலேயே "பாண் சேரிப் பற்கிளக்கு மாறு" என்னும் பழ மொழியும் எழுந்தது. பாணபத்திரர், திருநீலகண்ட யாழ்ப்பாணர். திருப்பாணாழ்வார் முதலிய யாழ்வேந்தரெல்லாம் பாணரே. 11ஆம் நூற்றாண்டில் தேவாரத் திற்கு இசை வகுத்தது திருநீல கண்ட யாழ்ப்பாணரின் மரபினரான ஒரு பெண்டாவர். தொல்காப்பியர் காலத்திற்கு முன்னிருந்து வழங்கிவரும் பாணாற்றுப் படை கூத்தராற்றுப் படை முதலிய செய்யுள்களும் நூல்களும் பாணரின் இசைத் தலைமையைப் புலப்படுத்தும்."

இந்திய இசையின் சிறப்பம்சமான இந்த ராகங்கள் தமிழ் மக்கள் உலகுக்கு வழங்கிய கொடையாகும். சுரங்களை இறங்கு நிலையாகவும், ஏறுநிலையாகவும் பாடும் போது ராகங்கள் பிறக்கும். சுரங்களை ஒழுங்கு முறையில் பாட பிறக்கும் இனிய இசையில் ரசம் பிறக்கும் என்பர். பாடும் சுரங்களுக்கேற்ப ராகங்களும் மாறுபடும். இனிமையை முன்னிலைப் படுத்திய தமிழர்கள் இணைவான சுரங்களை வைத்து இனிய இசையை உண்டாக்கியதுடன் இனிமையற்ற இசையை உண்டாக்கக்கூடிய சுரங்களின் சேர்க்கையை தவிர்த்தும் வந்திருக்கிறார்கள். அதனை அவர்கள் அபஸ்சுரம் [Atone] என அழைத்தனர்.

twelvetone4நவீன இசை வடிவமாக மாற்றம் கண்ட ஐரோப்பிய இசை அபஸ்வர இசையயும் இணைத்துக் கொண்டு [Twelve Tone Series] வளர்ச்சியடைந்தது. ஆர்னொல்ட் ஷூன்பேர்க் [Arnold Schoenberg *1874-1951*] என்ற ஆஸ்திரிய நாட்டுக் கலைஞரால் இது கண்டு பிடிக்கப்பட்டது.

தேவார காலத்தில் இசையில் மிக முக்கியான மாற்றங்கள் ஏற்ப்பட்டன. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தமிழிசை ராகங்கள் மத வழி பாட்டுக்குள் திருப்பப்பட்டதால் புதிய பரிசோதனைகள் புறம் தள்ளப்பட்டு, பார்ப்பனீய சித்தாந்தத்துக்கு ஏற்ப குறுக்கப்பட்டு அதன் வளர்ச்சியும் தடுக்கப்பட்டன. உழைக்காமல் காலத்தை கொண்டு சென்ற பார்ப்பனீய சித்தாந்தம் தனது வாழ்வியல் உள்ளடக்கத்தை இசையிலும் திணித்து இறுக்கியது. தமிழிலக்கியங்களில் குறிப்பிடப்படும் பல்லியம் [Orchestra] என்கிற வாத்திய இசையை புறக்கணித்து மதப் பிரச்சாரத்திற்கு, மொழி சார்ந்த இசைக்கு முக்கியத்துவம் கொடுத்தது. உழைக்கும் மக்கள் சார்ந்த தாளலய இசை [Rythmic] முற்றாக மறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டது. இது போன்ற ஒரு நிலையை நாம் மத்திய கால ஐரோப்பிய சர்ச் இசை வரலாற்றிலும் காண்கிறோம். ஐரோப்பாவில் 17 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட எழுச்சி [Revolution] மதம் சாராத சிம்பொனி இசையை [Symphony] உருவாக்கியது. இசையை மதத்தின் தளைகளிலிருந்து பிரித்தது.இது போன்றதொரு மாற்றம் தமிழ், இந்தியச் சூழலில் சிந்தித்துப் பார்க்கமுடியாதிருந்தது.

தொடரும்

திருவாசகத்துக்கு வந்த தொல்லை

யாழ்ப்பாணத்திலே பல வருடங்களாக ஒரு பழக்கம் இருந்தது. கோயில்களிலே புராணபடனம் செய்வதுதான் அது. இப்போதும் இந்த வழக்கம் உள்ளதா என்று தெரியவில்லை. மார்கழி மாதம் திருவெம்பாவைக் காலத்திலே திருவாதவூரடிகள் புராணமும் கந்தசட்டி விரத காலத்திலே கந்தபுராணமும் படிப்பார்கள். இந்த இரண்டு புராணங்கள் மட்டும் ஏனோ, மிகவும் பிரபலமானவையாக இருந்தன. மேற்குறிப்பிட்ட காலங்களை விட வேறு விழாக் காலங்களில் கோயிலிலே கந்தபுராணம் படிக்கும் வழக்கமும் யாழ்ப்பாணத்திலே இருந்துவந்துள்ளது. ஒருவர் செய்யுளை வாசிக்க இன்னொருவர் பயன் (உரை) சொல்வார். இப்படிப் புராணம் படிப்பவர்களைப் பௌராணிகர் என்று அழைப்பர். கோயிலுக்கு வரும் அன்பர்கள் இருந்து புராணபடனத்தைக் கேட்டு இன்புறுவர். தமிழ் இலக்கண, இலக்கியம் அதிகம் கற்காதவர்கள்கூட கேட்டு விளங்கும் வகையில் இலகு தமிழில் உரை கூறப்படும். கற்றவர் சபையாக இருந்தால், புராணத்தில் உள்ள இலக்கண நுணுக்கங்கள், இலக்கிச் சுவை எனப் பல விடயங்கள் பேசப்படும், ஆராயப்படும்.

புராணங்களை எழுதும்போது, அதை ஆக்கியவர்கள் காப்புச் செய்யுள் பாடுவார்கள். பல புராணங்களிலே முதலாவது செய்யுள்

விநாயகரைப் பாடுவதாக அமையும். தணிகைப் புராணத்திலே 'பண்ணியம் ஏந்தும் கரந்தனக்காக்கி' என்று முதற் செய்யுள் அமைந்துள்ளது. திருவாதவூரடிகள் புராணத்துக்கு ஒரு காப்புச் செய்யுள் உண்டு. 'பவளமால் வரையில் நிலவெறிப்பதுபோற் பரந்த நீற்றழகு' என்று அந்தச் செய்யுள் ஆரம்பிக்கும். பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணம் இதற்கு விதிவிலக்காக உள்ளது. அதன் காப்புச்செய்யுள் 'உலகெலாம் உணர்ந்து' என்று சிவனை வழுத்தி ஆரம்பிக்கிறது. திருவாதவூரடிகள் புராணபடனம் தொடங்கும்போதும் நிறைவுறும்போதும் பவளமால்வரையில் என்ற காப்புச்செய்யுள் பாடப்படும். கந்தபுராணத்திலே ஐந்து காப்புச் செய்யுள்கள் உள. 'திகட சக்கரச் செம்முகம்', 'உச்சியின் மகுடம் மின்ன', 'மூவிரு முகங்கள் போற்றி', 'இந்திரராகிப் பார்மேல்', 'வான்முகில் வழாஅது பெய்க' என்ற ஐந்துமே அவை. இந்த ஐந்து செய்யுள்களையும் ஒவ்வொரு நாளும் ஆரம்பத்திலும் முடிவிலும் பாடியே கந்தபுராணபடனம் நடக்கும். புராணபடனம் செய்தாலென்ன, புராணம் பற்றிய சொற்பொழிவு ஆற்றினாலென்ன, அந்தந்தப் புராணத்தின் காப்புச் செய்யுளை முதலிலும் முடிவிலும் பாடும் மரபு இருக்கிறது.

திருவாசகத்திலே இப்படியொரு காப்புச் செய்யுள் கிடையாது. 'நமச்சிவாய வாஅழ்க' என்று மிக அழகாக இறையருளுடன் ஆரம்பித்துள்ளார் மாணிக்கவாசகர். ஆனால், சிவபுராணத்தை ஓதும்போது மட்டும் பல இடங்களிலே தொல்லை இரும்பிறவி என்ற வெண்பாவைப் பாடிவிட்டே பலரும் ஓதத் தொடங்குகிறார்கள். சிவபுராணத்தின் காப்புச் செய்யுள் போன்ற தோற்றத்தை இந்த வெண்பாவுக்கு அளித்துவிட்டார்கள். வேறு எந்தத் திருவாசகப் பாடல் பாடும்பொழுதும் இப்படி அவர்கள் பாடுவதில்லை. அப்படி இருக்கும்போது சிவபுராணத்துக்கு மட்டும் ஏன் இந்த வழக்கு?

'தொல்லை இரும்பிறவி' என்ற வெண்பா திருவாசகத்தின் பெருமையைக் குறிக்க, பின்னால் வந்த ஒருவரால் எழுதப்பட்டது. திருவாசகத்தின் பெருமையை எடுத்தியம்புவதன்றி இப்பாடலுக்கும் திருவாசகத்துக்கும் வேறு எவ்வித தொடர்பும் இல்லை. திருவாசகப் பெருமையைக் குறிக்க வேறும் பல பாடல்கள் உள்ளன. அவற்றையும் இவர்கள் பாடுவதில்லை. அப்படியிருக்கும்போது இந்தப் பாடலை மட்டும் பாடும் வழக்கம் எப்படி வந்ததென்பது தெரியவில்லை. புரியாத ஒரு புதிராகவே இது இருக்கிறது.

'தொல்லை' என்ற சொல்லும் மங்கலமான சொல்லல்ல. 'செந்திருவும் திங்களும் பூவும் தலைசிறப்ப' என வாழ்த்துப் பாடல்களைப் பாடும்பொழுது முதலிலே பயன்படுத்தவேண்டிய சொற்கள் எவை என்று ஓர் இலக்கணம் இருக்கிறது. அதை மீறி, தொல்லை என்ற சொல்லை ஏன் ஆரம்பத்திலே பாடவேண்டும் என்பதும் தெரியவில்லை. எவ்வித தொடர்புமற்ற, பொருத்தமற்ற, பயனற்ற ஒரு பாடலை இறைவழிபாட்டின்போது, மணிவாசகர் பாடிய கல்லும் கசியும் திருவாசகம் ஓதுமுன் பாடவேண்டுமா? நாம் இதுபற்றிச் சிந்திக்கவேண்டும்.

இன்னொரு வேடிக்கையான, வருத்தமான செய்தியையும் இங்கு குறிப்பிடவேண்டும். இறைவழி காட்டும் தேனினும் இனிய சிவபுராணத்தை சிலர் மரணச்சடங்கிலே மட்டும் பாடும் பாடலென நினைக்கிறார்கள். அதனால் அதை வழிபாட்டுக்குப் பயன்படுத்துவதைத் தவிர்க்கிறார்கள். பயன்படுத்தப் பயப்படுகிறார்கள். சிவபுராணத்தைப் பத்தியுடன் ஓதுவதால் மன அமைதி, செல்வம், இறையருள் என்பன கிட்டும். தினமும் ஓதுவதால் நமக்குத் தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீங்கும். நம்முடைய அல்லல் அறும். நம்மை ஆனந்தமாக்கும்.

மதுரை

கற்றோர் பெருமை

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் - மன்னர்க்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றஇடம் எல்லாம் சிறப்பு.

ஒரு நாட்டின் அரசனையும் அனைத்தையும் பிழையின்றி கற்றவரையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அரசனைவிட கற்றவரே சிறப்புடையவர்.

நாடு இல்லை என்றால் அரசனுக்கு மதிப்பில்லை. கற்றவருக்கு எங்கு சென்றாலும் சிறப்பாகும்.

லண்டனில் அதிக
காய்கறி வகைகளை
இறக்குமதி செய்து
விற்பனை செய்பவர்கள்



இலண்டனில் தரமான தங்கத்திற்கு

PATHMINI

22ct GOLD

JEWELLERS

892 London Road
Thornton Heath
Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999

இலண்டனில் மிகக்குறைந்த வீதத்தில்
நகை அடைவு பிடிக்கும் ஒரே ஒரு நிறுவனம்

Sri Soobana Jewellers

Pawn Broker

எமது நிறுவனமானது நீங்கள்
அதிக வட்டி வீதத்தில்
எங்கு அடகு
வைத்திருந்தாலும்
அதை மீட்டு தருவதோடு
குறைந்த வட்டி வீதத்தில்
இங்கு வைக்கப்படும்

2.49% to 2.99%

அனைத்து வகையான
தங்க நகைகளும்
இங்கே அடகு பிடிக்கப்படும்

020 8900 9009

OPENING HOURS :
MON - SAT 10.00 AM - 6.00 PM
www.srisooban.jewellers.com
194 EALING ROAD,
WEMBLEY,
MIDDLESEX HA0 4QG

Anthoorium

World of Designs

Jewellery & Textiles

102, B Burlington Road New Malden,
Surrey KT3 4NT
Tel : 020 8942 8001 Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk Email : sales@anthoorium.co.uk

தமிழர் தகவல் பயணத்தில் துணையிருக்கும் நிறுவனங்களை ஆதரியுங்கள்

SURYAA New Improved Taste!

Special packs
900g Curry Powder
with
1kg Flour

Hurry ! Limited Packs Only

Only £3.99

Great Offer for a **Great New Taste!**

தமிழர் தகவல் பயணத்தில் துணையிருக்கும் நிறுவனங்களை ஆதரியுங்கள்

குறோய்டன் அருள்மிகு சக்தி கணபதி ஆலயம்

MAHA KUMABISHEKAM OF SHREE SAKTHY GHANAPATHY TEMPLE

21 Brigstock Road, Thornton Heath, Croydon CR7 7JJ, UK, Tel: 0208 689 3466

புனராவர்த்தன அஷ்டபந்தன சமர்ப்பண மஹா கும்பாபிஷேக விழா விஞ்ஞாபனம்

21.06.2013 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி

விநாயக அடியார்களே! சகல வளங்களும் செல்வச் செழிப்பும் நிரம்பப்பெற்ற ஐக்கிய இராச்சியத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், சுந்தரர் ஆகிய சமய குரவர்கள் வழியில் செல்லும் சைவப் பெருமக்கள் நிரம்பிய குறோய்டன் பிரதேசத்தில் அருளாட்சி புரிபவரும் சதுர்த்தி திதியில் விரதமிருந்து பூஜிப்பதினால் அகமகிழ்ந்து பலவித வரங்களை அருளுகின்ற காரணத்தினாலேயே "சதுர்த்தி பூஜன ப்ரியா" என்று வேத சிவாகமங்களினால் போற்றப்படுபவரும், தமது பக்தர்களின் குறைகளை களைந்து அவரவரது விருப்பங்களை நிறைவேற்றி அருள் புரிவதில் முதன்மையாக திகழ்பவருமாகிய ஸ்ரீசக்தி கணபதிப்பெருமானின் திருக்கோயிலானது புனருத்தாரணம் செய்விக்கப்பட்டு மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி பெருவிழாவானது நிகழும் மங்களகரமான விஜய வருடம் ஆனி மாதம் 7ம் நாள் (21.06.2013) வெள்ளிக்கிழமை அனுஷ நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.00 மணி சிம்மலக்ன ஜெய வேளையில் மஹா கும்பாபிஷேகம் வேத சிவாகம முறைப்படி நிகழ்ச்சி நிரலில் காணும்வண்ணம் நடைபெற உள்ளதால் பக்தப்பெருமக்கள் திரளாக வருகை தந்து இக்கும்பாபிஷேக விழாவிலும் அதற்கு முன்பின் நடைபெறவிருக்கும் சகல கிரியா நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீசக்தி கணபதிப்பெருமானின் திருவருள் பெற்றிடுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

பூர்வாங்கக் கிரியைகள்

16.06.2013 ஞாயிறு தொடக்கம் 19.06.2013 புதன் காலை வரை

காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை - மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை

யாகசாலை பூஜைகள்

19.06.2013 புதன் மாலை தொடக்கம் 21.06.2013 வெள்ளி வரை

காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை - மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை

எண்ணெய் காப்பு

20.06.2013 வியாழக்கிழமை

காலை 6.00 மணிமுதல் இரவு 8.00 மணி வரை

பக்தர்களினால் தெய்வத்திருமேனிகளுக்கு எண்ணெய் காப்பு சாற்றும் வைபவம் தொடர்ந்து நடைபெறும்.

கும்பாபிஷேகம்

21.06.2013 வெள்ளிக்கிழமை

காலை 6.00 மணி ஆராதனைகள் தொடங்கப்பெற்று 10.00 மணிக்கு சிம்ம லக்கின ஜெயவேளையில் விமானங்கள் கும்பாபிஷேகம் தொடர்ந்து ஸ்ரீசக்தி கணபதி பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம், தீபாராதனை, திருவருட் பிரசாதம்.

மாலை 6.00 மணி முதல் மஹாபிஷேகம், விசேட சந்தனக்காப்பு அலங்காரம் வசந்தமண்டப பூஜை, பிள்ளையார், முருகன், அம்பாள் திருவீதி உலாக்காட்சி, திருவருட் பிரசாதம் வழங்குதல்.

கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும்.
உபயம் நடாத்த விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இன்னவம், அலங்காவலர் சபை, ஆலய குருமார்கள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள்.

– சுபமங்களம் –

JR Print, Tel : 0208 503 6643

Best Food



11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA Tel : 0208 9000100

364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323

259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269, Fax : 684 4677

எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும்
அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று மலிவு விலை
பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை
சேமியுங்கள்

தமிழர் தகவல் பயணத்தில் துணையிருக்கும் நிறுவனங்களை ஆதரியுங்கள்

NOW SHOWING
cineworld cinemas
ILFORD, WANDSWORTH, FELTHAM
ABERDEEN, STAPLES CORNER
CARDIFF, CRAWLEY, SHEFFIELD
GLASGOW RS, LIVERPOOL, BRADFORD
MILTON KEYNES, STOCKPORT
From 10th May
EDINBURGH | MIDDLESBOROUGH
IPSWICH - SUNDAY / MONDAY ONLY
AT HARROW SAFARI CINEMA
From Fri 3rd May to Thu 9th May
13.30-17.00
(20.30 Tue to Thu Only)
(22.45 Fri / Sat / Sun Only)

Enter our competition to **WIN 4 TICKETS** to see Ethir Neechal in Cineworld.co.uk or Harrow Safari Simply Answer the below Questions now

Who is the producer of the film ETHIR NEECHAL ?

E-mail your answer to et@ayngaran.com

WIN 4 TICKETS

Competitions Ending Soon *Terms and conditions apply

Enter our competition to **WIN 4 TICKETS** to see MOONDRU PER MOONDRU KADHAL in Cineworld.co.uk or Harrow Safari Simply Answer the below Questions now

NOW SHOWING CINEWORLD CINEMAS
ILFORD | WANDSWORTH | FELTHAM | STAPLES CORNER
SHEFFIELD | ENFIELD | CRAWLEY | MILTON KEYNES
GLASGOW RS | CARDIFF | BRADFORD

WIN FOUR TICKETS

AT HARROW SAFARI CINEMA
From Fri 3rd May to
Mon 6th May @ 20.00

Name the top three heroes who are acting in the film MOONDRU PER MOONDRU KADHAL?

E-mail your answer to mpmk@ayngaran.com

Competitions Ending Soon *Terms and conditions apply

JAYA TV | Ayngaran TV | KALAIGNAR TV

ஐங்கரன் தொலைக்காட்சியின் UK நேயர்களுக்கு மிகப்பிரமாண்ட சலுகைகள்

ஐங்கரன் தொலைக்காட்சியோடு உங்களை இணைத்துக்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.

உங்கள் பதிவுகளுக்கு இப்பொழுதே அழையுங்கள் !!

முந்துங்கள்... பயன்பெறுங்கள்... 02085 43 43 22

COMING SOON

JOIN US ON YouTube www.youtube.com/ayngaran | www.facebook.com/ayngaran | visit us: www.ayngaran.com

தமிழர் தகவல் பயணத்தில் துணையிருக்கும் நிறுவனங்களை ஆதரியுங்கள்

AMBAAL
Jewellers



176 Upper Tooting Road London SW17 7ER
Tel : 020 8672 9955 Fax : 020 8672 7097

எவரஸ்ட்

24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233

அசத்தலான
அசைவ சுவைக்கு

Breakfast Lunch Dinner

லாசியத்தில் முதலாவது
தமிழ்க்கடை

கற்பகம்

தங்கள் சேவையை
விரிவாக்கியுள்ளார்கள்

KATPAGAM

36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 694 88 10

உடன் காய்கறிகள்
பழவகைகள், இறைச்சி,
தமிழ் ஆடியோ, வீடியோ
தமிழ்படங்கள் அனைத்தும்
ஒரே இடத்தில்

ஆடை ஆபரணம் வாங்க ஆசை பூர்த்தியாக
நீங்கள் என்றும் நாட வேண்டிய ஒரே இடம்

JK Gold House & Fashion House

314 - 316 London Road
Croydon
Surrey CR0 2TJ
Tel : 020 8684 4577
Fax : 022 8684 4677

தமிழர் தகவல் பயணத்தில் துணையிருக்கும் நிறுவனங்களை ஆதரியுங்கள்

தமிழர் தகவல் பயணத்தில் துணையிருக்கும் நிறுவனங்களை ஆதரியுங்கள்

FRESH FISH OFFERS

Villai - £7.49
Thiralli - £6.99
Medium Prawns - £7.49
King Prawns - £8.99

BUY 1 GET 1 FREE OFFERS

5Kg Basmati Rice - £7.99
5Kg Oorkuthu Rice - £7.99
5Kg Thangavur Ponni Rice - £7.99
5Kg Poonagiri
Motakarupan Rice - £7.99

VEGETABLE OFFERS

Small Onion - £1.99/Kg
Aubergine - £1.99/Kg
3 Coconuts - £1.00
Keerai Items - £2.99/Kg

HALAL MEAT OFFERS

Pangu errachi - £4.79
Mutton Boneless - £8.99/Kg
Goat Meat - £7.49/Kg
Baby Chicken - Each £2.50
OR 3 for £6.00

OTHER OFFERS

20Kg Tilda Basmati - £24.99
20Kg Akash Basmati Rice - £16.99
Kings / Surya Curry Powder 900g - £3.99

2 FOR OFFERS

TRS / Natco Red Lentils - 2 for £3.49
TRS / Natco Urid Dal - 2 for £4.49
Nestomalt - 2 for £3.99
Frozen Fish; (available
on £2.99/pack lines only)
Niru / Diamond / Yalee / Vaani - 2 for £5.00
Samudra - 2 for £5.50
Caveeri / Goldman / BTM Jack Mackerel
in Brine 425g - 2 FOR £2.50
Surya Mackerel 425g - 2 for £2.00

MORE THAN 200 OFFERS IN STORE FOR A LIMITED TIME ONLY!

KRISHNA CASH & CARRY

704 - 708 Uxbridge Road, Hayes, UB4 0RX
W:- www.krishnaz.co.uk E-info@krishnaz.co.uk
T-0208 848 1250

121

Lycamobile

Call the world for less

Receive calls when Roaming in

Turkey

Poland

India

Norway

Pakistan

Europe

(Connection charge 7p/call)

For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322

Buy and top up online or in over 115,000 stores

TESCO Sainsbury's BARCLAYS Costcutter Budgens Mills

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

Incoming calls offer: you will be charged 0p/min for the first 60 Minutes. A connection charge of 7p/call will apply. After 60 Minutes every additional minute will be charged at 7p. All calls will be charged per sec. The offer applicable only for roaming in: Austria, Belarus, Belgium, Bosnia and Herzegovina, Czech Republic, Denmark, Finland, France, Germany, Greece, Holy See (Vatican City), Hungary, Iceland, Ireland, Italy, Kosovo, Latvia, Lithuania, Luxembourg, Macedonia, Malta, Moldova, Netherlands, Norway, Poland, Portugal, Romania, San Marino, Slovakia, Spain, Sweden, Switzerland, Ukraine, Turkey, India & Pakistan. Offer valid from 01/07/2012 to 31/08/2012

Lycamobile

Call the world for less